சூளாமணி

[illegible]

[illegible]

பழனியப்பா பிரதர்ஸ்

சூ ளா ம ணி

55·3

செ. பொன்னுசாமி, எம். ஏ., பி. ஓ. எல்.,
தமிழ்த் துறைத் தலைவர்,
இசுலாமியா கல்லூரி, வாணியம்பாடி.

பழனியப்பா பிரதர்ஸ்

சேப்பாக்கம், சென்னை-5 :: தெப்பக்குளம், திருச்சி-2

முதற் பதிப்பு
நவம்பர், 1959

விலை ரூபா
1—75

ஸ்ரீநிவாஸ் பிரிண்டிங் பிரஸ், சென்னை—1.

முன்னுரை

ஒரு நாட்டின் வரலாறு அந்நாட்டு மொழியில், எளிய இனிய நடையில் எழுதப்பட வேண்டும்; நான்காம் வகுப்புவரை படித்தவர்களும் கற்றுணரும் இயல்போடு அமைந்திருக்க வேண்டும். அப்பொழுதே அந்நாட்டு மக்கள் தங்கள் நாட்டு வரலாற்றை எளிதில் படித்து இன்புறுவர்; நாட்டுப் பற்றில் ஊறித் திளைப்பர்; தங்கள் நாடு என்றுமே அடிமையாகாத வாறு காப்பாற்றும் வீரத்தோடு வாழ்வர். அந்நாடு என்றுமே பெருமைக்குரிய நாடாக விளங்கும். அது போன்றதே மொழியும்.

மொழியின் வளர்ச்சி கருதிய கவிஞர்கள், எழுத்தாளர்கள் தங்கள் மொழிக்குப் பணி புரியத் தொடங்குகின்றனர். தங்கள் ஆற்றலுக்கேற்ப வரலாற்றுக் காவியமும், கற்பனைக் காவியமும் எழுதிக் குவிக்கின்றனர்.

இலக்கியங்களே ஒரு மொழியின் செல்வமாகும். அச்செல்வங்களை யாவருமே எளிதில் கற்றுணர்தல் இயலாததாகும். ஆதலால், அவ்விலக்கியங்களின் சுருக்கம் இனிய எளிய உரைநடையில் நூல் வடிவாக வெளிவந்தால் யாவரும் கற்று இன்புறுவர். அவர்களை அறியாது அவர்கள் உள்ளத்தில் மொழிப் பற்று வளர்ந்தோங்கும். அவ்வளர்ச்சி அம்மொழியை

என்றும் அழியாது காக்கவும், வளர்க்கவும், அடிமை யாகாது போற்றவும் பெருந்துணைபுரியும் என்பது உறுதி.

அந்த நல்நோக்கத்தோடு எழுந்ததுதான் இச் சிறு உரைநடைநூல். ஐஞ்சிறு காப்பியங்களில் கிடைத் துள்ள நூல்களுக்கெல்லாம் சுருக்கமான உரைநடை எழுதவேண்டும் என்ற அவாவின் முதல் வெளியீடு தான் சூளாமணி.

இந்நூலை எழுதும்படி ஊக்கம் அளித்த என் ஆன்ம குரு பேராசிரியர் திரு பு. ரா. புருஷோத்தம நாயடு (Reader in Tamil University of Madras) அவர் களுக்கும், என் அருமை நண்பர் திரு. வித்துவான் கு. விசுவநாதம் (A. I. R.) அவர்களுக்கும் என்றும் கடமைப்பட்டுள்ளேன். இந்நூலை வெளியிட முன் வந்த திரு. பழனியப்பா அவர்களுக்கும் என் நன்றி உரியதாகுக.

ஆசிரியன்.

1. ஆசிரியர்

மக்கள் கற்பனை உள்ளங் கொண்டவர்கள். அவர்கள் உள்ளம் எவ்வளவு தூரம் கற்பனை உலகில் பறக்கும் என்று சொல்ல இயலாது; சூழ் நிலைக்கேற்பப் பறந்து செல்லும். சங்க காலத்து வாழ்ந்த மக்கள் பறந்து கண்டுகொண் டிருந்த கற்பனை உலகம் வேறு; புராண கால மக்கள் பறந்து கண்டுகொண் டிருந்த உலகம் வேறு; புத்த சமண மதங்கள் செல்வாக்குப் பெற்றிருந்த காலத்திய உலகம் வேறு ; சைவ வைணவ மதங்கள் செல் வாக்குப் பெற்றிருந்த காலத்திய கற்பனை உலகம் வேறு. இருபதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வாழும் நம் உள்ளம் நாடும் உலகம் வேறு.

இவ்வாறு பல்வேறுபட்ட காலங்களில் வாழ்ந்த மக்களின் கற்பனைத்திறனை விளக்குவன அவ்வக் காலத்தெழுந்த இலக்கியங்களாகும். பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், ஐம்பெருங் காப்பியங்கள், ஐஞ்சிறு காப்பியங்கள் யாவும் அவ்வக்கால மக்கள் உள்ளத்தை எடுத்துக் காட்டி விளக்குகின்றன.

மேற்குறிப்பிட்ட நூல்களுக் கமைந்த பெயர் களில் பெருங்காப்பியம், சிறுகாப்பியம் என்ற பெயர் கள் வடமொழியைப் பின்பற்றி எழுந்தன. சிந்தா மணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி ஐந்தும் பெருங்காப்பியம் எனப்படும்.

இவைகளுள் முதல் மூன்றுமே முழுநூல்களாக நம் கையில் உள்ளன. யசோதர காவியம், சூளாமணி, நாககுமார காவியம், உதயண காவியம், நீலகேசி ஐந்தும் சிறுகாப்பியம் எனப்படும். இவைகளுள் நாககுமார காவியம் அகப்படவில்லை. பெருங் காப்பியம், சிறுகாப்பியம் ஆகிய பத்து நூல்களில் தமிழுக்கே உரிய நூல்கள் சிலம்பும் மணிமேகலையுந் தான்; மற்றைய எட்டும் தழுவல் நூல்களே. அதனுல்தான் வடமொழியைப் பின்பற்றிப் பெயர் (காப்பியம்) கொடுத்தனர்போலும்!

இங்குக் குறிப்பிடப்படும் சூளாமணி ஐஞ்சிறு காப்பியங்களுள் இரண்டாவதாக வைத்து எண்ணப்படுகிறது. செய்யுள் வடிவில் அமைந்த இந் நூல் சொல் நயம், பொருள் நயம் வாய்ந்தது. இந் நூலை ஐந்திரிபறக் கற்றுணர்ந்த திருவாளர் ஒளவை சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள் இந்நூலின் சிறப்பியல்புகளைப் பெரிதும் பாராட்டுகின்ருர்.

'சொல்வன்மை, சோர்வின்மை, அஞ்சாமை என்ற மூன்றும் இந்நூலிலுள்ள ஒவ்வொரு சொல்லிலும் ஒளிவிட்டுத் திகழ்கின்றன. சுருங்கச் சொன்னுல், இச்சூளாமணிக்குச் 'சூளாமணி' என்று பெயரிட்டது முற்றும் பொருத்தமே என்று கூறுவது சாலும். சிறுகாவியம் என்பனவற்றுள் இதனை ஒன்ருக வைத்தவர் சிறுமை பெருமைகளைத் தெரிந்துணரும் மதுகை இல்லாதவர் என்று கூறலாம். ஏனெனில், காவிய நெறியிலாதல், கவிநடையிலாதல் இதன்கண் எத்தகைய சிறுமையும் காணப் படவேயில்லை. சிந்தாமணிக்குப் போல இச்சூளாமணிக்கும் உச்சிமேற் புலவர் கொள்ளும் நச்சினர்க்

கினியர் ஓர் உரை எழுதியிருப்பாராயின், இச்சூளாமணி தமிழ்ப் புலவர் அனைவர்க்கும் சூளாமணியாய் மிக விளங்கியிருக்கும் என்று இனிது எடுத்து மொழியலாம்' என்று எழுதுகின்றார்.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த இந்நூலின் கதைத் தலைவன் தந்தை பயாபதி இந்நூலில், 'மஞ்சுசூழ் மலைக்கோர் சூளாமணி யெனக்கருதும் மன்னா' என்றும், 'துளங்காது உயர்ந்து உலகின் முடிக்கு ஓர் சூளாமணி யானான்' என்றும் பாராட்டப்படுகின்றான். இத்தலைவனைப் பாராட்டப் பயன்பட்ட சூளாமணி என்ற தொடரையே இந்நூலுக்குப் பெயராக ஆசிரியர் அமைத்திருப்பது பாராட்டுதற்கு உரியதாகும். இது போன்று இந்நூலாசிரியர் பெயர் அமைந்ததும் வியப்பிற்குரியதாக அமைந்துளது.

இந்நூலாசிரியர் தோலாமொழித் தேவர். இவ்வாசிரியர் பெயர் கூறும் அளவே, இப்பெயர் ஆசிரியரின், இயற்பெயராக இருத்தற்கில்லை, காரணப் பெயராகவே அமைந்திருக்கலாம் என்று கருத இடந்தருகிறது. தமிழ்ச்சங்க இலக்கியங்களில் தொடித்தலை விழுத்தண்டு, செம்புலப் பெயல்நீர், தேய்புரிப் பழங்கயிறு என்ற தொடர்களை எடுத்தாண்ட ஆசிரியர்களின் இயற்பெயர் காணப்படவில்லை. ஆதலால், அவ்வாசிரியர்களுக்குத் 'தொடித் தலை விழுத்தண்டினார்', 'செம்புலப் பெயல் நீரார்,' 'தேய்புரிப் பழங்கயிற்றினார்' என்ற பெயர்கள் வழங்குகின்றன. அவ்வாசிரியர்களின் இயற்பெயர் தெரியாத காரணத்தாலோ, அன்றிச் சிறப்புக் கருதியோ இத்தொடர்கள் புனைபெயர்களாக வழங்கப் பெறுகின்றன. இதுபோன்று சூளாமணி ஆசிரியர் தம்

நூலில், 'நூலாராய்ந்து' என்று தொடங்கும் செய்யு ளில் 'தோலா நாவின்' என்ற தொடரை எடுத் தாண்டுள்ளார். அத்தொடரையே சிறப்புக்கருதி புனைபெயராக இவ்வாசிரியர்க்குத் 'தோலாமொழி' என்று அமைத்தனர்போலும்! வேறு சில தனிப் பாடல்களும் சூளாமணி ஆசிரியர் 'தோலாமொழி' என்றே குறிப்பிடுகின்றன.

'தமிழ் வரலாறு' என்ற நூலை எழுதிய தஞ்சை திரு. சீநிவாசப் பிள்ளை அவர்கள், 'சூளாமணி ஆசிரி யரின் இயற்பெயர் ஸ்ரீவர்த்த தேவர்: 'தோலா மொழி' அவருக்கு அமைந்த புனைபெயரே' என்று குறிப்பிடுகின்றார். மைசூர் நாட்டிலுள்ள ஒரு கல் வெட்டும் இந் நூலாசிரியர் ஸ்ரீவர்த்த தேவர் என்றே குறிப்பிடுகிறது.

இவ்வாசிரியரின் பெயர் இருவகையாக அமைந் திருப்பது போல், இவரின் காலமும் பலவகையாகக் காணப்படுகிறது. கி. பி. ஏழாம் நூற்றாண்டு முதல் பத்தாம் நூற்றாண்டு முடிய ஏதோ ஒரு நூற்றாண் டில் இருக்கலாம் என்று கருதுகின்றனர். அதற் கேற்பக் காரணங்களும் பொருத்தமாகக் காட்டுகின் றனர்.

இவ்வாசிரியர் ஆருகத மாபுராணத்திலுள்ள ஒரு கதையை விளக்கிச் சூளாமணி என்னும் இந் நூலைச் செய்யுள் வடிவில் ஆக்கியுள்ளார். இந்நூல் வழிநூலாயினும், நூலின் அமைப்பு முதல் நூல் என்று சொல்லத் தகும் தகுதி பெற்று விளங்கு கிறது.

2. சுரமை நாடு

பாவலர் புகழும் இப்பரத கண்டத்தில் சிறந்து விளங்கிய நாடுகள் பல. அவைகளுள் சுரமையும் ஒன்ருகத் திகழ்ந்தது. அந்நாடு நானில வளம் பொருந்தியது; மனங்கவர் மலைவளம், முல்லை நில வளம், மாண்புறு மருதவளம், கானல் கடல்வளம் யாவற்ருலும் செல்வம் கொழித்த நாடு. சிந்து நதியின் முழுப் பயனையும் பெற்றுத் திகழ்ந்தது அச் சுரமை நாடு. ஆகையால் அந்நாடு திருமகளின் நடன அரங்கோ என்று வியக்கும் நிலையில் விளங்கியது.

தலைநகர்

மண்மகளின் மதிவதனம் எனலாம் சுரமை நாட்டை; அம்மதிவதனத்தை அழகு செய்யும் திலகம் எனத்தக்கது போதனமாநகர் என்று பெருமிதத்தோடு கூறலாம். ஒரு நாட்டின் தலைநகருக்குரிய எல்லா இயல்புகளும் ஒருங்கே அமையப் பெற்றது அந்நகர். அந்நகர், தன்னைக் காணும் ஒவ்வொருவரும் கனவுலகில் இருக்கின்ருேமோ, அன்றி நனவுலகில் தான் இருக்கின்ருேமோ என்று ஐயுறும்படி அணி பெற்றுத் திகழ்ந்தது.

தலைவன்

அத்தலைநகரைத் தன் தனிநகராகக்கொண்டு சுரமை நாட்டை ஆட்சிபுரிந்த அரசன் பயாபதி.

'கொடைஅளி செங்கோல் குடிஓம்பல் நானகும்
உடையனும் வேந்தர்க்கு ஒளி' —390

என்ற குறளுக்கு இலக்கியமாக இவனைக் கூறலாம். மக்கட்கு உற்றுழி உதவும் உயர்ந்த பண்பினன்; அருள்கொண்டு குடியோம்பும் குணத்தினன். ஆகையால், குடிகளும் இவன் ஆட்சியில் செல்வப் பெருக்குற்றுச் செழித்தனர்; வரையாது வரிகொடுத்து மன்னனை வாழ்த்தினர். ஆகையின், மன்னனும் மன்னர்க்கு மன்னன்போல் திகழ்ந்தனன். 'குடி உயரக் கோன் உயரு' மன்றோ!

தலைவியர்

இப்பேரரசன் பெருந்தேவியர் இருவர். மூத்தவள் மிகாபதி; இளையவள் சசி. இவர்கள் அழகில் சிறந்தோர்; அமைதியில் உயர்ந்தோர். [1] அரசன் நாட்டு மக்களின் உயிர்; அரசியர் அரசனின் உயிர். 'மாண்ட என்மனை' என்ற பிசிராந்தையார் கூற்று குறிப்பிடத் தக்கதாகும்.

மக்கட்பேறு

இவர்கள் இன்பவாழ்வின் பயனும் மக்கட்பேற்றையும் பெற்றனர். மிகாபதி ஒரு மகனைப் பெற்றெடுத்தாள். அவன் விசயன் எனும் பெயரோடு விளங்கினன். இளையவளாகிய சசி பெற்றெடுத்த மகன் திவிட்டன் எனப் பெயரிடப் பெற்றுத் திகழ்ந்தான். இருவரில் விசயனே மூத்தவன். அண்ணனும் தம்பியும் ஆகிய விசயனும் திவிட்டனும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து உரிய

1 'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்'-புறம்.

வயதை அடைந்தனர்; அரசிளங் குமரர்க்குரிய கலைகள் யாவும் கற்றுத் தேர்ந்தனர். அவர்கள் தோள்வலியும் தோற்றமும் கண்டுவியந்த மக்களும் மாதவரும் அவர்களைப் பலதேவனும் கண்ணனும் ஆவர் என்று புகழ்ந்தனர்.

நிமித்திகன்

இளவரசர்கள் இருவரும் எப்பொழுதும் இணை பிரிவதில்லை; குறிப்பாக அரசவையில் அவர்களைத் தனித்துப்பார்க்க முடியாது. தந்தையின் இருமருங்கும் அமர்ந்திருப்பதில் அவர்களுக்கோர் ஆனந்தம். அவர்கள் அரசவைக்குச் சென்றிருந்த ஒரு நாள், அங்கதன் என்ற நிமித்திகன் ஒருவனும் சென்றிருந்தான். அவன் சோதிட நூற்களைக் கரைகண்டவன்; முக்கால உணர்ச்சி யுடையவன்.

நிமித்திகன், அரசன் தன் முகம் நோக்கும் செவ்வி யறிந்து எழுந்து நின்றான்; அரசனுக்கு வாழ்த்துக் கூறினான். அரசன் முன்னாள் இரவு கண்ட ஒரு கனவின் பயனை எடுத்து விளக்கினான். 'அரசே, நேற்றிரவு வானவெளியினின்றும் ஒரு களிறு தங்கள் இருப்பிடம் நோக்கி இறங்கி வந்தது; வந்த அக்களிறு தன்கையிலிருந்த வெண் தாமரை மலரைத் தங்கள் இளைய இளவரசன் கழுத்தில் அணிந்து சென்றதாகக் கனவொன்று கண்டீர்கள். இந்நிகழ்ச்சி விஞ்சையர் உலக அரசன், தங்கள் இளைய குமரனுக்குத் தன் அரசிளங் குமரியைத் தானே நல்குவன் என்பதை வலியுறுத்துகின்றது. அன்றியும், திருமணம் குறித்து விஞ்சையன் அனுப்பும் தூதுவன் ஒருவனை இன்னும் ஏழு நாட்களில் சந்திப்பீர்கள்.

அத்தூதன் உங்கள் புட்பமாகாண்டம் எனும் பெயரிய சோலையில் வந்து இறங்குவான். மேலும், அத்திருமணத் தொடர்பால் திவிட்டன் பெரும் பேரரசனுகும் பேறும் பெறுவான் என்பதையும் என் முக்கால உணர்வால் உணர்கிறேன்' என்று கூறினான்.

அரசனும் தான் கனவு கண்டது உண்மையாகையால், கனவின் பயனும் நனவாகக்கூடும் என்று நம்பிப் பெருமகிழ் வெய்தினான்; பெருமிதங்கொண்டான்; நிமித்திகன் உள்ளம் உவக்கும் வண்ணம் விருந்தளித்து உபசரித்தான்; பரிசளித்துப் பாராட்டினான். நிமித்திகனும், சங்கப் புலவர்கள் பரிசில்விடை பெறுவது போன்று அரசனிடம் பிரியாவிடை பெற்றுச் சென்றான்.

மந்திராலோசனை

நிமித்திகன் கூற்று முடிந்ததும் அவையும் கலைந்தது. அவை கலைந்ததும் அரசன் அமைச்சர்களைத் தனியே அழைத்து ஆலோசித்தான். அமைச்சர்கள், திவிட்டன் பிறந்தபோது சோதிடர்கள் கூறியதையும் அக்குமரன் கையில் சங்கு சக்கர இரேகைகள் இருப்பதையும், நிமித்திகன் அரசவையில் கூறியதையும் தொடர்புபடுத்திச் சிந்தித்தனர். இளவரசன் பிறந்தபோதே சோதிடர், 'இக்குமரன் மன்னர் மன்னனாகத் திகழ்வான்' என்றனர்; திருமாலுக்குரிய சங்கு சக்கர இரேகைகளும் இருக்கின்றன. நிமித்திகனும், விஞ்சையர் தொடர்பால் திவிட்டன் அடைய விருக்கும் பேற்றினை விளக்கினான். இவைகளை எண்ணிப் பார்த்தால் இளவரசன் எதிர்

காலத்தில் நம்பிக்கை கொள்ள முடிகிறது. ஆதலால், இன்னும் ஏழு நாட்களில் வருவதாக எதிர்நோக்கத் தக்க விஞ்சையர் தூதனை வரவேற்கவேண்டிய ஏற் பாட்டினைச் செய்ய வேண்டுமென்று அரசனுக்கு அறிவித்தனர்.

பூங்காவில் வரவேற்பு

அரசனும் அமைச்சர்களின் அறிவுரையை ஏற் றுக்கொண்டான்; புட்பமாகாண்ட சோலையில் இருந்த ஒரு பளிங்கு மண்டபத்தை அழகுறுத்த ஆணையிட்டான்; ஆங்கோர் இருக்கையும் அமைக் கச் செய்தான். விஞ்சையர்களும் வியப்புறும் அளவு அலங்கரிப்பு அமைந்திருந்தது. விஞ்சையர் தூதனை எதிர்சென்று வரவேற்க, துருமகாந்தன் என்ற தன் உயர் அலுவலருள் ஒருவனை நியமித்தான். அவன் ஏழுநாள் அளவும் அச்சோலையிலேயே இருக்க வேண்டுமென்று கட்டளையிட்டான். துருமகாந்த னும் அரசன் ஆணையை ஏற்று விஞ்சையர் தூதன் வரவை ஆவலோடு எதிர்நோக்கி இரவு பகல் எந் நேரமும் அச்சோலையில் தங்கினான்.

3. விஞ்சையர் உலகம்

மேருமலைச் சாரலில் உள்ள நகரங்கள் யாவும் விஞ்சையர் உலகம் என்று கருதப்பட்டன. அவ்வுலகம் தக்கணசேடி, உத்தரசேடி எனும் இருபிரிவோடு விளங்கிற்று.. ஒவ்வொரு சேடியிலும் பல நகரங்கள் இருந்தன. ஒவ்வொரு நகரும் ஒவ்வொரு விஞ்சைய அரசனால் ஆளப்பட்டுவந்தது. உத்தர சேடியில் உள்ள மிகப்பெரும் நகரம் இரத்தின பல்லவம். அந்நகரை ஆண்ட அரசன் அச்சுவகண்டன். அவன் தன் தோள்வலியாலும் வாள்வலியாலும் விஞ்சையர் உலகத்தையே ஆட்டிப்படைத்தான். தக்கண உத்தர சேடிகளில் உள்ள எல்லா அரசர்களுமே அவனுக்கு அடங்கி ஒடுங்கினர்; அஞ்சி அயர்ந்தனர்; அவன் ஆணையை ஏற்றுத் திறை கொடுத்துப் போற்றினர்; தங்கள் ஆற்றாமையை எண்ணி ஏங்கினர். இருந்தபோதிலும் விதிவிலக்கும் இல்லாமல் இல்லை.

தக்கணசேடியில் உள்ள அரசர்களுள் சிறந்தவன் சடியரசன். அவன் இரதநூபுர சக்கரவாளத்தை ஆண்டுவந்தான்; தக்கணசேடியில் உள்ள அரசர்களுள் வாள் வலிமையிலும் வல்லவனாக விளங்கினான். இருப்பினும் ஆற்றலில் அச்சுவகண்டனுக்கு அடுத்தபடியில் விளங்கினான். ஆயினும், அச்சுவகண்டன் சடியரசனிடம் அன்பும் மதிப்பும் கொண்டிருந்தான். இயல்பாக அவ்வாறு இருந்தான் என்று சொல்வதற்கில்லை; ஏதோ சில இன்றி

யமையாமை கருதியே அவ்வாறு இருந்தான் என்று தெரிகிறது.

மக்கட்பேறு

சடியரசன் பெற்றெடுத்த மக்கள் இருவர்: ஒரு மகன்; ஒரு மகள். மகன் பெயர் அருக்க கீர்த்தி; மகள் சுயம்பிரபை. அரசிளங்குமரனும் அரசிளங் குமரியுமாகிய அவர்கள் வளர்ச்சியையும் கலைப் பயிற்சியையும் இங்கு விளக்க வேண்டிய அவ சியமே இல்லை. மன்னர் குலத்துக்குரிய மாண்புறு சிறப்பியல்புகள் யாவும் பெற்றுத் திகழ்ந்தனர்; பருவக் கவர்ச்சியும் எழிலும் கொண்டு விளங்கினர்.

இன்பப் பொழுதுபோக்கும் இறை வழிபாடும்

வழக்கம்போல் இளவேனிற் காலம் வந்தது. மணங்கமழும் மலர்கள் அதன் வரவை யாவர்க்கும் அறிவித்தன. மக்கட் பேற்றிலே திளைத்த சடியரச னும் இளவேனில் தரும் இன்பத்தையும் நுகர விழைந்தான். தன் நகர் மலைச்சாரலில் உள்ள சோலை வேனிலில் பெற்றிருக்கும் வளத்தைக் காணத் தன் மக்களோடும் பரிவாரங்களோடும் சென்றிருந் தான். சென்ற யாவரும் இயற்கை அன்னையின் எழிலில் திளைத்துப் பசியையும் மறந்தனர்; சோலை யின் ஒவ்வொரு பகுதியாகக் கண்டுவந்தனர். சோலையின் உட்பகுதியை யடைந்தபோது அரசன் அருகக்கடவுளின் ஆலயத்தைக் கண்டான். கண்ட தும் அரசன் சிறிதுநேரம் அசைவற்று அமைதியோடு நின்றான். கைம்மாறு கருதாத கருணை வள்ளலைத்

தன் மனமொழி மெய்களால் வழிபட எண்ணி ஆலயத்தை வலம் வந்தான். வலமாக வந்து வாயிலை அடைந்ததும், வாயிற் கதவங்கள் திறப்பாரின்றித் தாமே திறந்துகொண்டன. அருட்கடல் பேரொளிப் பிழம்பாய் நின்று அரசனுக்குக் காட்சி யளித்தான். அரசன் உள்ளமும் உடலும் மலர, உவகைக் கண்ணீர் சொரிய, பரம்பொருளை உளமார உன்னி, வாயார வாழ்த்தி வணங்கினான்.

வழிபாடு முடிந்தது. அரசன் ஆலயத்தை விட்டு வெளியில் வந்தான். அப்பொழுது சாரணர் இருவர் ஆலயத்தை அடைந்தனர். அவர்களும் தம் தொழுகையை முடித்துக்கொண்டு வெளியில் வந்தனர்; ஆலயத்தின் அண்மையிலிருந்த அசோக மரத்தடியில் அமைந்திருந்த ஆதனத்தமர்ந்தனர். அரசன் தன் பரிவாரங்களோடு சென்று அச்சாரணர்களை வணங்கினான். அவர்கள் அரசனை 'வாழ்க' என வாழ்த்தி அருகில் அமரச் செய்தனர். அரசன் அவாவினைக் குறிப்பால் உணர்ந்த சாரணர்கள் அவனைப் பார்த்து, 'அரசே, நீ வினையின் கூறுபாட்டையும் அதனை நீக்கும் வழியையும் அறிந்து தெரிய விரும்புகின்றாய் என்பதை உணர்ந்து பெரிதும் மகிழ்கின்றோம். நல்வினை தீவினை இரண்டும் பிறப்பிற்குக் காரணமானவை: ஒன்று, பொன் விலங்கு; மற்றொன்று, இரும்பு விலங்கு. அவ்விலங்குகள் ஆன்மாவைப் பிணித்து விடுகின்றன. அவ் விலங்குகளை அறுப்பதற்கும் ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. இறைவன் திருவடியை இமைப் பொழுதும் மறவாது எண்ணி இறைஞ்சுதலாகிய வழிதான் அது' என்று அறிவுறுத்தினர்.

அறிவுரை அரசனை விழிப்படையச் செய்தது. அரசி அறிவு பெற்ருள். அரசிளங்குமரி அறிவுரையில் ஈடுபட்டுத் தெளிவுபெற்ருள். குமரி, ‘சக்கிர வாளம்’ என்னும் நோன்பு நோற்பதாகவும் முனிவர்களிடம் உறுதி கூறினுள். அரசனும் இந்நாள் ஒரு நன்ஞள் என்று கூறிச் சாரணர்களை மீண்டும் வழிபட்டுப் பிரியா விடைபெற்றுப் பிரிந்தனன்.

நோன்பும் மணமும்

அரசன் அரண்மனை அடைந்ததும் சுயம்பிரபை நோன்பு நோற்றற்குரிய தனியிடம் அமைத்துக் கொடுத்தான். துணைக்குத் தோழியர் நின்றனர். சுயம்பிரபை உறுதியோடு நோன்பியற்றினுள். நோன்பு வெற்றிகரமாக முடிந்தது. முடிந்ததும் முதலில் தன் தந்தையைக் கண்டு வணங்கினுள். அவள் திறமையைக் கண்டு வியந்த தந்தை அவளைப் பெரிதும் பாராட்டினுன்; தன் மகளால் தனக்கு ஏற்பட்ட புகழை எண்ணி மகிழ்ந்தான். உவந்த உள்ளத்தில் இளவரசியின் பருவக்கவர்ச்சியும் அறிவு முதிர்ச்சியும் காட்சியளித்தன. தழைத்து வளர்ந்த கொடி கொழுகொம்பின்றி வாடி வதங்குவது கண்டான். அக்காட்சி அரசன் உள்ளத்திலிருந்த நிலையாமை உணர்ச்சியை மறைத்தது; மகளின் திருமண விழா நிகழ்ச்சியைத் தோற்றுவித்தது. எண்ணத்தில் ஆழ்ந்தான்.

‘கொடிபடருதற்கேற்ற பற்றுக்கோடு வேண்டும்; தன் மகளுக்கேற்ற மணுளன் வேண்டும். ஏற்புடை இருவர் சேர்ந்தால் அவர்கள் வாழ்க்கைச் சகடம் வழியறிந்து செல்லும்; இன்றேல், வாழ்க்கைத் துன்பத்தில் அப்படியே மூழ்கி மீளும்வழி அறியாராவர்.

பொருத்தமில்லாத ஒருவனைக் கணவனாக்கினாலும் தன் மகள், 'அவன் வேண்டாம்' என்று சொல்லும் வேட்கையை வெளிப்படுத்தாள்; தன் தலைவிதியை எண்ணி யெண்ணி ஏங்குவாள்; என்றும் மீளமுடியாத் துயர்க் கடலில் மூழ்கி மடிவாள். இந்நிலை, ஆணிப் பொன்னில் பதித்து அழகு பார்க்கும் வயிரத்தை ஈயத்தில் பதித்து அதன் அழகை அழித்ததோடொக்கும். ஆகையின், வயிரத்திற்கு ஏற்ற ஆணிப்பொன் தேட வேண்டும்; அவளுக்கு ஏற்ற இளவரசனை நாடி அடைய வேண்டும்; அமைச்சர்களின் உதவிகொண்டு விரைவில் தேடவேண்டும்' என்று தனக்குள் முடிவு செய்துகொண்டான்.

அமைச்சரோடு ஆலோசனை

அரசன் அமைச்சர்களை அழைத்தான். அமைச்சர்கள் ஒன்று திரண்டு அரசன் ஆணை வழிப்படும் மொழிகளை ஆவலோடு எதிர்நோக்கினர். அரசன் அமைச்சர்களை நோக்கினான். 'மணிவிளக்கனைய நம் நங்கை சுயம்பிரபையின் அழகினுக்கும் அமைதிக்கும் ஏற்ற ஆடவனைப் பற்றி ஆய்வதே நாம் இப்பொழுது இங்குக் கூடியதன் நோக்கமாகும். ஆகையால், நம் விஞ்சையர் உலக இளவரசருள் நம் மங்கையின் தோள்மணத்தற்குரிய தோற்றமும் ஏற்றமும் பெற்றவன் யாவன் என்பதைப் பற்றிய உங்கள் கருத்தினைத் தெளிவுபடுத்துக' என்றான்.

சுச்சுதன்

அமைச்சர்களும் ஒவ்வொருவராக எழுந்து தம் மனக் கருத்தினை எடுத்து விளக்கினர். முதலில் சுச்சுதன் என்னும் அமைச்சன் கூறலானான் :

"அரசே, உத்தரசேடியில் இரத்தின பல்லவத்தை ஆளும் அச்சுவகண்டன் சிறந்த வீரனன்றே! அவன் தன் தோள்வலி, வாள்வலி, படைவலி, துணைவலியால் விஞ்சையருலகில் விஞ்சியவன். அவன் வலிகண்டு அஞ்சிய இவ்வுலகம் முழுதும் அவனுக்குக் கப்பம் அளிக்கின்றது. மண்ணுலகில் உள்ள பல அரசர்களும் அவனுக்கு அடக்கம். ஆனால், அவன், நம்மிடம் பல ஆண்டுகளாகத் திறை பெறுவதில்லை அல்லவா! காரணம், நம் நங்கை நல்லாள் பூங்கொம்பென வளர்ந்திருப்பது தான். நம் கொம்பைத் தழுவும் குறிக்கோளினன்.

'ஈங்குநம் குலக்கொம்பு ஒப்பாள்
பிறந்தபின் இனிய னாகித்
தேங்கமழ் அலங்கல் வேலோன்
திறைகொளல் ஒழிந்து செல்லும்;
ஆங்கவன் திறங்கள் எல்லாம்
அறிதியால் ஆணை வேந்தே...'

"அவனுக்கு மகட்கொடுத்தலே மகிழ்ச்சி அளிப்பதாகும் என்று என் உளம் உணர்கின்றது. இதுவே உறுதி தருவதுமாகும். விஞ்சையரும் நம்மைக் கண்டு அஞ்சுவர். கொற்றவ, நும் மனக்கருத்தும் ஒன்றுமேல் அவனுக்குக் கொடுப்பதே ஏற்புடைத்து.

"மற்றுஅவற்கு உரியள் நங்கை
என்பதுஎன் மனத்தி னேடும்
உற்றுவந் துளது; கால
உறுதியும் உடையது; ஒக்கும்.
வெற்றிவேல் விஞ்சை யாரும்
அஞ்சுவர்; மின்செய் பைம்பூண்
கொற்றவ! குறிப்புண் டாயின்,
கொடுப்பது குணங்கொல் என்றான்."

பவச்சுதன்

"அரசே, சுச்சுதன் கூற்று உண்மைதான்; ஆயினும், அச்சுவகண்டனுக்குச் சுயம்பிரபையைக் கொடுப்பது எவ்வகையிலும் பொருந்தாது. அவன் வயதால் முதியவன்; உளத்தால் கொடியவன்; பல மகளிரை மணந்து கொண்டிருக்கிருன். கனகசித்திரை என்பாள் அவன் பட்டத்தரசி. அவள் மகன் இரத்தினகண்டனே பட்டத்துக்குரிய இளவரசன். வேறு யாரும் பட்டத்தை அடைய முடியாது. ஆதலால், அக்கிழவனுக்கு நம் நங்கையைக் காமக்கிழத்தியாக அளிப்பது ஏற்புடைத்தன்று.

"கின்னரகீத நகரத்து இளவரசன் புவனஞ்சன், அமுதபுர இளவரசன் வேகமாதரன், கேமமாபுர இளவரசன் பதுமரதன், இரத்தினபுரத்து இளவரசன் சுவர்ணரதன் முதலியோர் நம் இளவரசிக்கு ஏற்றோராவர். இவர்களில் ஒருவனைத் தேர்ந்தெடுப்பதே ஏற்ற செயலாகும்" என்ருன் பவச்சுதன் என்னும் அமைச்சன்.

சுதசாகரன்

"அரசே, இவ்விளவரசர்கள் எல்லோருமே அச்சுவகண்டன் பகைக்கு அஞ்சுவர்; அவன் பகையைப் பொருட்படுத்தாது நம் நங்கையை மணக்க முன்வரமாட்டார்கள். சுரேந்திரகாந்த நகரத்து இளவரசன் விச்சுவன் அச்சுவகண்டன் பகைமையை அலட்சியப்படுத்தும் ஆற்றல் பெற்ருேன்; நம் இளவரசிக்கு ஏற்ற ஏற்றமும் தோற்றமும் உடையோன்; காமனும் கண்டு மயங்கும் கட்டழகினன். அன்றி சோதிமாலே என்ற தங்கையும்

அவனுக்கு உண்டு. அவள் நம் நம்பி அருக்ககீர்த்திக்கு ஏற்ற நங்கை. இரண்டு திருமணத்தையும் ஒருங்கு நடத்த ஏற்பாடு செய்யலாம்'' என்றான் சுதசாகரன்.

சுமந்திரி

"அரசே, சுரேந்திரகாந்த இளவரசனைப் பற்றிய பாராட்டுரை யாவும் உண்மையே. ஆயினும், அவன் இல்லறத்தை வெறுத்துத் துறவற நோக்குடையவனாகக் காணப்படுகிறான்; எப்பொழுதும் இறைவழிபாட்டில் ஈடுபாடு உடையவனாக விளங்குகிறான். அவன் முற்பிறவியிலேயே அரச செல்வத்தை வெறுத்து அருந்தவம் செய்தவன்; அத்தவத்தின் பயனாக அமர உலக வாழ்வைப் பெற்றவன். மீண்டும் அரச குமரனாகப் பிறந்தும் பழம்பிறப்பின் தொடர்பால் இவ்வுலக வாழ்வை வெறுத்துத் தவமியற்றுகின்றான்; தவத்தில் வெற்றி பெற்று அருகனின் அருளால் அழியா வீடெய்தும் அமலனாக விளங்குகின்றான்.

"நம் நங்கைக்கேற்ற நாயகனை நாமே நாடி அடைவது அரிதினும் அரிது. யாரை மணமகனாகத் தேர்வது என்பதை இத்துடன் நிறுத்திவிடுவோம். இதைப்பற்றி வேறொன்றும் சிந்திக்க வேண்டாம். நம் மந்திராலோசனை இப்படியே நீண்டு சென்றால் முடிவுகாண முடியாது.

'இந்திரன் அனைய நீரோய்!
இனிப்பிறிது எண்ண வேண்டா;
மந்திரம் நீளு மாயின்
வருவன அறிய லாகா...'

"ஆயினும், அறிவதற்கு ஒரு வழியும் உளது. நம் விஞ்சைய நாட்டில் விஞ்சுற்று விளங்கும் சத விந்துவை யாவரும் அறிவர். அவர் எதிர்கால நிகழ்ச்சியை எளிதில் அறிந்து இயம்ப வல்லர். அவரை அடைந்து, அவர் அறிவுரை கேட்டு அதன்படி நடத்தலே சாலச்சிறந்தது என்று அடியேன் எண்ணுகின்றேன்" என்ருன் சுமந்திரி என்னும் மந்திரி.

முடிவு

அமைச்சன் சுமந்திரி கூறியதே பொருத்த முடைய தென்று முதல் அமைச்சனும் மற்றைய அமைச்சர்களும் தலையசைத்தனர். அரசனும் அதனை ஆமோதித்தான். யாவரும் சேர்ந்து சத விந்துவை நேரில் காண்பதற்குரிய ஏற்பாட்டினைச் செய்யத் தொடங்கினர்.

நிமித்திகன்

நிமித்திகனைக் காண விரும்பிய அரசன் ஆடம்பரத்தோடு ஊர்தியில் செல்ல விரும்பவில்லை. பய பக்தியோடு நடந்து நிமித்திகனைக் காண விரும்பினான். அதனால், அரசன் நடந்து செல்லும் தெருக்கள் மலர் தூவி அழகுபடுத்தப்பட்டிருந்தன. பொழுது புலருமுன் அரசன் மெய்க்காவலர் புடை சூழ ஐம்பெருங் குழுவுடன் சதவிந்து இருக்கும் நகர் நோக்கி விரைந்தனன். வழியில் ஓரிளம் நங்கை அரசனை வாழ்த்தி வலம் வந்தாள். அவளைக் கடந்து சிறிது தூரம் சென்றதும் நிமித்திகன் மாளிகையைக் கண்ணுற்ருன்.

அரசன் வருகை அறிந்த நிமித்திகன் எதிர் சென்று வாழ்த்துக்கூறி, தன் மனைக்கு அழைத்துச் சென்றான்; நறுமணம் கமழும் சந்தனச்சோலை யனைய ஒரு மண்டபத்தில் அமரச் செய்தான். அரசன் வருகைக் குரிய காரணத்தைக் குறிப்பால் உணர்ந்த நிமித்திகன் சோதிட நூலில் உள்ள தன் வல்லபத்தை வெளிப்படுத்தக் கருதினான்.

'அரசே, தாங்கள் இங்கு வரும்பொழுது வழியில் உங்களை வாழ்த்தி வலம்வந்த வனிதை திருமகளாவள்; இஃது, உங்கள் எண்ணம் இனிது ஈடேறும் என்பதை முன்கூட்டியே எடுத்துக் காட்டும் நன்னிமித்தமாகும். தங்கள் மனம், மதுமலர் மாலையனைய மங்கை சுயம்பிரபையின் மணவினையைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்திருக்கின்றது. சொற்களால் விளக்கமுடியாத அளவுக்கு உங்கள் மகள் அடையப் போகும் பேறு பெரிது. அவளுக்கு அமைய இருக்கும் ஆருயிர்க் காதலன் வாழ்க்கை வரலாறு மாபுராணத்தில் கூறப்பட்டிருக்கிறது' என்றனன்.

'அவ்வரலாற்றினை விளக்கிக் கூறவேண்டு' மென்று அரசன் வேண்டினான். வேண்டுகோட்கிணங்கிய நிமித்திகன் கூறுகின்றான்:

திவிட்டனின் பழம் பிறப்பு

'அரசே, மூவுலகினும் நடுவணதாகிய பூவுலகம் கருமலோகம் எனப்படும். இப்பூவுலகம் ஏழு தீவுகளாகப் பிரிக்கப்பட்டுளது. ஏழில் ஒன்றாகிய சம்புத் தீவின் நடுவண் மேருவும் அதன் குலமலைகளும் அமைந்துள்ளன. நதிகள் ஏழும், கண்டங்கள்

ஏழும், கடல்கள் பதினுன்கும் கொண்டது இத் தீவம். இத்தீவில் அமைந்த ஏழு கண்டங்களில் சிறந்தது பரதகண்டம். இப்பரத கண்டம் போக பூமியாய் மூன்றூழி காலம் இருந்தது. பின்னர் பிரமர்கள் தோன்றி, சூரிய சந்திரன் முதலிய மண்ட லங்களையும் மக்களையும் படைத்தனர். மக்களின் ஆன்மா உய்யும் பொருட்டு அருகநாதன் தோன்றி யருளினுன்.

'அவன் அருளினுல் உலகை ஒரு குடைக்கீழ் ஆண்ட மன்னர் மன்னன் பரதராசன். அவன் வழக் கம்போல் அருகதேவனை நோக்கித் தனக்குப்பின் இவ்வுலகில் நிகழப்போகும் நிகழ்ச்சிகளைக் கூறி யருளுமாறு வேண்டினுன். அருகனை அன்றி இன் னும் இருபத்து மூவர் நாதர்களாகத் தோன்றுவர்; பரதேசுவர (பரதராசன்) னுக்குக்குப்பின் பதினெரு வர் மன்னர் மன்னர்களாகத் தோன்றுவர். அன்றி, வாசுதேவர்கள் ஒன்பதின்மரும், பிரதி வாசுதேவர் கள் ஒன்பதின்மரும் தோன்றுவர். பரதராசன் மகன் மரீசியே முதல் வாசுதேவன் எனப்படுவான். அவ னுக்குப் பின் அவன் குடியில் இரண்டாம் வாசு தேவன் தோன்றுவான். அவன் (இரண்டாம் வாசு தேவன்) பிரதிவாசுதேவனுகத் தோன்றிய அச்சுவக் கிரீவனை (அச்சுவகண்டன்) ஒரு கன்னியின் பொருட் டுக்கொன்று வெற்றிமாலை சூடுவான்; அன்பும் ஆர்வ முங்கொண்டு, வீரமும் வெற்றியுந் தோன்ற, நீதி யும் நேர்மையும் வெளிப்பட இவ்வுலகைப் புரந்தருள் வான்' என்ற விடையினை அருகநாதன் அருளினுன்.

'அரசே, அந்த இரண்டாம் வாசுதேவன்தான் சுயம்பிரபையை மணந்து, அச்சுவக்கிரீவனைக்

கொல்பவன். அவன் இப்பூவுலகிலுள்ள போதனமா நகரத்தரசன் பயாபதி என்பானின் இளையகுமர ளுகத்தோன்றியுளான்; திவிட்டன் எனும் பெயரொடு விளங்குகின்ருன். அவன் உன் மங்கையை மணந்த பின், உத்தர, தக்கண சேடிகளை வென்று உனக்கு அளிக்கப் போகின்ருன். இதற்கு முன்னறிவிப்புப் போன்று இன்னும் ஒரு திங்களில் திவிட்டன் ஒரு கோளரியைக் கொன்று வெற்றி மாலை சூடுவான்' என்று கூறி முடித்தான்.

இதனை முற்றுங் கேட்ட சடியரசன் இன்பக் கடலில் ஆழ்ந்தான்; அந்நிமித்திகனுன சதவிந்து வுக்குச் சோதிமாலை என்னும் நல்வள நாடொன்றை நன்கொடையாகக் கொடுத்து, பொன்னும் மணியும் பரிசாக வழங்கிச் சிறப்பித்தான்; அந்தி வருமுன் தன் அரண்மனை அடைந்தான்!

அரசியுடன் உரையாடல்

அரண்மனை அடைந்ததும் நேரே அந்தப்புரம் சென்ருன்; தன் ஆருயிர்க் காதலி வாயுவேகையைக் கண்டு மகிழ்ச்சிக்குரிய கருத்தினை வெளிப்படுத்தி அவளோடு உரையாடினுன்.

"நங்காய், அரசகுலம் அகன்று தழைத்த மரம் போன்றது; அம்மரத்தினைத் தாங்கும் அடிப்பாகம் போன்று விளங்குபவன் ஆண்மையும் அறிவும் நிறைந்த அரசனுவான்; மரத்தினைப் பெருமைப்படுத் தும் பரந்த கிளைகள் போன்றவள் அரசனைப் பெரு மைப்படுத்தும் அரசியே ஆவாள். மரத்தின் முழு அழகினையும் வெளிப்படுத்தி நிற்பவை மணம் மிக்க

மலர்கள்; அம்மலர் போன்று அரச குலத்தை விளக்கி நிற்பவர்கள் அக்குடியில் பிறக்கும் மக்கள்.

'தலைமகன் தாள்தனக் காகச், சாகைய
நிலைமைகொள் மனைவியா, நிமிர்ந்த பூந்துணர்
நலமிகு மக்களா (முதியர் தேன்களாக்)
குலமிகு கற்பகம் குளிர்ந்து தோன்றுமே.'

"மலரின் தன்மைக்கேற்ப மரத்தின் மதிப்பும் புகழும் உயர்கின்றன; அவ்வாறே அக்குடிப்பிறந்த மக்களின் பண்பிற்கேற்ப அரசகுடியின் பெருமையும் உயர்கின்றது. நம் நங்கை நல்லாள் சுயம்பிரபை யால் நம் குடிப்பெருமையே மிக உயரப் போகின்றது. அவளுக்குக் கணவனாக அமையப் போகும் இளவர சன் நம் விஞ்சையர் நாட்டினை அஞ்சச் செய்யும் அச்சுவகண்டனையே அதட்டி அடக்கி ஒடுங்கச் செய்யும் ஊக்கம் படைத்தவன். ஆதலால், இனி யானே விஞ்சையர் நாட்டுப் பேரரசன். இவ்வள வுக்குங் காரணமாக விளங்கும் நம் இளவரசியைப் பெற்றுப் பெருமை அளித்தவள் நீ அன்றோ! ஆணிப் பொன் முத்தினை ஈன்ற வலம்புரிச் சங்கன்றோ நீ!

'வலம்புரி வயிற்றிடைப் பிறந்த மாமணி
நலம்புரி பவித்திர மாகும் நாமநீர்
பொலம்புரி மயிலனாய்! பயந்த பூங்கொடி
குலம்புரிந் தவர்க்கெலாம் கோல மாகுமே.'"

என்றான் அரசன்.

"தலைவ, இவ்வளவு பெருமையும் யான் பெற்றது தங்களைப் பெற்றதால் அன்றோ!" என்றாள் அரசி.

'ஆம், என்ன ஆற்றல்! எத்தகைய அறிவுத் திறன்! நயம்படப் பேசும் உன் அழகே அழகு!' என்று வியந்தான் அரசன்.

4. திருமணத் தூது

ஆலோசனை

சடியரசன் மறுநாள் காலை அமைச்சர்களை அழைத்து, அவர்களுடன் நிமித்திகன் கூறியதைப் பற்றி ஆராய்ந்தான். அமைச்சர்கள் யாவரும் ஒரு முகமாக முடிவு செய்தனர்: அதாவது, நிமித்திகன் கூறுவது உண்மையாகலாம் என்ற தம் நம்பிக் கையை அரசனுக்குத் தெரிவித்தனர். அரசனும் அவர்கள் கருத்தை அப்படியே ஏற்றுக்கொண் டான். அதன்படி போதனமா நகரத்து இளைய இளவரசன் திவிட்டனுக்குத் தன் மகள் சுயம் பிரபையைத் திருமணம் செய்துவைக்க இசைந்தான்; தான் மகள் கொடுக்க விரும்புவதைத் தூதனை அனுப்பிப் பயாபதி அரசனுக்கு அறிவிப்பதென்று முடிவு செய்தான்.

தூதனுப்பல்

பின்னர், தம் அரசன் கருத்தைப் பயாபதி உள் ளங் கொள்ளுமாறு குறிப்பாக எடுத்துரைக்கும் ஆற்றல் பெற்ற ஒருவனைத் தூதனாகத் தேர்ந்தெடுத் தனர். அத்தூதனுக்கு நடத்த எண்ணிய இத்திரு மணத்தைப் பற்றிய முழு விபரத்தையும் எடுத்துச் சொல்லி, சடியரசன் கையொப்பம் இட்ட திருமுகத் தையும் கொடுத்து அவனைச் சுரமை நாட்டிற்கு அனுப்பினர்.

புட்பமாகாண்டம்

சடியரசன் கட்டளையைப் பணிவுடன் ஏற்ற தூதன் ஆகாயவழியே புறப்பட்டான் ; வழியில் உள்ள பல மலைகளையும், காடுகளையும், நாடுகளையும் கடந்துசென்று சுரமை நாட்டின் தலைநகரை அழகு செய்து நிற்கும் புட்பமாகாண்டம் என்னும் மலர்ச் சோலையில் இறங்கினான்; அச்சோலையில் அமைந்த மலர்மரங்களும் மலர்க்கொடிகளும் மலர்சொரிந்து தலைவணங்கித் தன்னை வரவேற்கும் எழிலினைக் கண்டு மனம் மகிழ்ந்து சோலையைச் சுற்றி வந்து அதன் காட்சியைக் கண்கொட்டாது கண்டுகொண் டிருந்தான்; சுற்றி வந்தபோது அவன் எதிரிலிருந்து வந்த ஒளியைக்கண்டு, ஒளிவந்தவழியே சென்றான். பளிங்குக் கல்லால் அமைக்கப்பட்ட அந்த இருக் கைக்கு அழைத்துச் சென்றது அந்த ஒளி· அழகிய அசோக மரத்தடியில் அமைக்கப்பட்டிருந்த அவ் விருக்கை உமிழும் ஒளியில் ஈடுபட்ட தூதன் தன்னையும் மறந்து சில விநாடி அவ்விருக்கையை இமை கொட்டாது பார்த்து நின்றான்; பின் தன் னினைவு பெற்று, இவ்வளவு சிறந்த இருக்கை இறை வனுக்காக இடப்பட்டதாகும் என்று எண்ணி, அரு கில் அணுகவும், அதன்மேல் அமரவும், அதனைத் தொட்டு உணரவும் தயங்கினான்; இறைவனைப் புகழ்ந்தவாறு நின்றுகொண் டிருந்தான்.

துருமகாந்தன்

விஞ்சையர் தூதன் வருகையை எதிர்நோக்கி யிருந்த துருமகாந்தன், அங்கு வந்திருந்தவனே விஞ்சையர் தூதனாகக்கூடும் என்று துணிந்தான்;

ஆதலால், அவனை வரவேற்று, அவன் கால்களில் மலர் தூவிப் பணிந்து, அசோக மரத்தடியில் அமைத்த இருக்கையில் அமரும்படி வேண்டினன். தூதனோ, 'அருகனுக்குரிய அவ்வாதனத் தமரேன்' என்று கூறி மறுத்தனன். துருமகாந்தன் அவ் விருக்கை அங்கு அமைத்ததற்குரிய காரணத்தை விளக்கமாக எடுத்துரைத்தான். உரை கேட்டு வியந்த தூதன் இருக்கையில் அமர்ந்தான்.

வரவேற்பு

விஞ்சையர் தூதன் வருகை மன்னன் பயாப திக்கு அறிவிக்கப்பட்டது. தூதன் வருகை அறிந்த அரசன் அகம் மகிழ்ந்து, திருவுளச் செயலினை வியந்து போற்றினான்; பின்னர் ஏவல் மகளிரை அனுப்பி விஞ்சையர் தூதனுக்கு வேண்டியவற்றைக் கவனிக்கும்படிச் செய்தான்; பட்டத்து யானையை அலங்கரிக்கச் செய்து தன் புதல்வர்களாகிய விசய திவிட்டர்களை அனுப்பித் தூதனை அழைத்து வரும் படிப் பணித்தனன்; தலைநகரை விழாக் காலம் போன்று அழகாக அணி செய்ய ஆணையிட்டான். தலைநகர் இமைப்பொழுதில் இந்திர நகராகக் காட்சி யளித்தது.

இளவரசர் வருகை அறிந்த விஞ்சையன் இருக் கையினின்றும் எழுந்து அவர்களைப் பணிந்து போற்றி வாழ்த்தினன். 'எங்கட்குப் பரமாசிரியன் ஆதற்குரிய தாங்கள் எங்களைப் பணிதல் தகாது' என்று விசயகுமரன் தடுத்தும் கேளாது வணங்கி னான். தூதன் அக்குமரர்களின் உடல் அமைப்பை யும், அழகையும் கண்டு வியந்து, 'இளவரசர்களே,

நீங்கள் விண்ணுலகத் தேவர்கள்; உங்கள் பெரு மைக்குமுன் இரவியின் பெருமை மின்மினி போன்ற தாகும்; மண்ணுலகின் தவப் பயனுக நீங்கள் விண் ணுலகைவிட்டு இங்குப் பிறந்திருக்கின்றீர்கள். இத் தகைய பெருமை வாய்ந்த உங்களைக் காண என் தவப் பயனுல் யான் பெற்ற பேறு பெரும் பேருகும். ஆதலால், தாங்கள் என்னுல் வணங்குதற்குரியீர்" என்று கூறி மீண்டும் வணங்கினுன்.

அதை மறுத்துக் கூற முடியாது திகைத்த அவ் விளவரசர்கள் தங்கள் தந்தையின் கருத்தை மட்டும் விண்ணப்பித்தனர். தூதனும் அவ்விண்ணப்பத் திற்கு மறுமொழி கூறுபவன் போன்று புறப் பட்டனன். அவனைப் பட்டத்து யானைப் பிடர்த்தலை ஏற்றி நகர் வலமாக அழைத்துச் சென்றனர்.

தூதன் நேரே கொலு மண்டபம் சென்று அரச னைக் கண்டு வாழ்த்தி வணங்கினுன். அரசன் அவனை வரவேற்று உரிய இருக்கை அளித்து அமரச் செய்தான். இருக்கையில் அமர்ந்த தூதன் எழுந்து நின்று தன் அரசன் கொடுத்த திருமுகத்தைப் பயபக்தியோடு எடுத்துப் பயாபதியிடம் நீட்டினுன். பயாபதியின் குறிப்பறிந்த அமைச்சர் குழுவில் ஒருவ னுகிய இலேககன் எழுந்து திருமுகத்தைத் தன் கைகளால் வாங்கிப் படித்தான் :

திருமுகம்

"விஞ்சையர் நாட்டு இரதநூபுர மன்னன் விடுக் கும் திருமுகம்: சுரமை நாட்டு மன்னர் பயாபதி காண்க.

"மன்னர்க்கு எல்லாச் செல்வமும் மல்குக. எம் திருமகள் சுயம்பிரபையைத் தங்கள் திருமகன் திவிட்டனுக்கு மணம் செய்விக்கும் மனக் கருத்துடையேம். தாங்கள் இதனை ஏற்றருள்க. வாழ்க மணமக்கள்!"

மன்னனின் மௌனம்

நிமித்திகன் வாயிலாக இவ்வாறு நிகழும் என்பதைப் பயாபதி அறிந்து, அதற்குரிய முன்னேற்பாட்டைச் செய்திருந்தும், நிமித்திகன் கூற்றுச் செயற்படுவதைக் கண்டு தன் செயல் மறந்தான்; சில விநாடியில் உள்ளந் தெளிந்து மகிழ்ச்சியில் ஆழ்ந்தான்; மகிழ்ச்சி மிகுதியால் பேசாதிருந்து விட்டான்.

சீற்றம்

மன்னன் வாய்வாளாது இருத்தற்குரிய காரணம் அறியாத தூதன் மன்னனைத் தவருக எண்ணினுன்; விஞ்சையர் திருமுகம் மதிக்கப்படவில்லை என்று மனங் கொதித்தான்; கொதித்துச் சொற்களைக் கொட்டிவிட்டான்:

"மலைபோல் விளங்கும் தோள்களையுடைய மன்னனே, நோயுற்ருன் பாலின் சுவையறியான்; அதுபோல் மானுடரும் விஞ்சையரின் பெருமை அறியார். மானுடர், தங்களோடு விரும்பிப் பழகும் விஞ்சையர் அளிக்கும் செல்வத்தை நுகரும் பேறு பெருர் போலும்!

'வரைமலி வயங்கு தோளாய்!
வியாதியால் மயங்கி னுர்க்குச்

சுரைமலி அமிழ்தத் தீம்பால்
சுவைதெரிந்து உண்ண லாமோ ?
விரைமலி விளங்கு பைந்தார்
விஞ்சையர் செல்வந் தானும்
நுரைமலி பொள்ளல் யாக்கை
மனித்தர்க்கு நுகர லாமோ ?'

"யானையின் வலியை ஆவிளங்கன்று அறியாதது போன்று விஞ்சையர் பெருமையை இப்பஞ்சையர் அறியார். கற்பகத்தின் பெருமையைக் கள்ளிச் செடி அறியுமா? கள்ளிச் செடி போன்றோர் மானுடர் என்பதை எங்கள் விஞ்சையர் அரசன் அறியாது என்னை அனுப்பினான் உன்னிடம்! நீ எங்களை அலட்சியப்படுத்தி எந்த விதமான மாற்றமும் உரையாது இருக்கின்றாய்.

'உள்ளிய மரங்கொள் சோலை
மண்மிசை உறையும் மாந்தர்
ஒள்ளிய ரேனும் தக்கது
உணர்பவர் இல்லை போலாம்;
வெள்ளியஞ் சிலம்பின் எங்கோன்
விடுத்ததே ஏது வாக,
எள்ளிஓர் உரையும் ஈயாது
இருந்தனை, இறைவ! என்றான்' "

அமைதி

இவ்வளவு இகழுரையும் கேட்ட பயாபதி, தூதன் சினந்துரைத்த உரையாவும் பொருளற்ற பொய்மொழி என்பதை விளக்குவதுபோல் அமைதியோடும் பணிவோடும் விடையிறுத்தான்:

"தூதுவ, யான் சிறிதுநேரம் வாளா இருந்ததால் உங்கள் அரசனையோ, உங்கள் அரசன் அனுப்பிய

தூதையோ, தூது கொணர்ந்த திருமுகத்தையோ அவமதித்தேன் என்று எவ்வாறு கூறமுடியும்? மண்ணவர் விஞ்சையர் செல்வத்தைப் பெறுதல் அரிதினும் அரிது. அரிய செல்வம் எமக்கு அளிக்கப்பட்டதை எண்ணி அகமிக மகிழ்ந்தேன்; அத்தகைய செல்வத்தை அளித்த உங்கள் அரசர்க்கு எத்தகைய முடங்கல் வரைவதென்ற சிந்தனையில் ஆழ்ந்தேன்; செருக்குற்றேன் அன்று.''

சீற்றம் தணிதல்

"அரசே, தங்கள் கருத்தினை அறியாது என் கருத்தினை இழந்தேன்; புன்மொழி புகன்றேன்; பொறுத்தருள்க. விஞ்சையரும் இம்மண்ணுலக மக்கள் வழித்தோன்றல்களே என்பதையும் மறந்து ஏதேதோ பேசினேன். இவ்விடத்து விஞ்சையரும் மானுடரே என்ற உண்மையைத் தங்கட்கு எடுத்துக் கூறித் தங்கள் மனத்தை மகிழச் செய்தாலன்றி யான் செய்த குற்றத்திற்கு மன்னிப்புப் பெற்றவன் ஆகேன்.

'இறைவன்ஆங்கு உரைப்பக் கெட்டேன்
என்னைபா வம்பொ ருந்தாக்
கறையவாம் மொழிகள் சொன்னேன்;
காவலன் கருதிற்று ஓரேன்;
பொறையினால் பெரியன் பூபன்;
சிறியன்யான் என்று நாணி
அறிவினால் பெரிய நீரான்
அவிந்தன கதத்தன் ஆனான்'"

என்று கூறிச் சீற்றம் தணிந்தான் தூதன்.

விஞ்சையர் குலப்பெருமை

பிறகு, அத்தூதன் விஞ்சையர்தம் குலப் பெருமை குறித்துப் பேசலானுன்:

“அரசே, ஆதிகாலத்து அரசகுலம் ஐந்து. அவற்றுள் ஒன்றே காசி நாட்டினை ஆண்டது. அக்குல அரசர்களில் பெரும்புகழ் பெற்று விளங்கிய வன் **கச்சன்**. அவ்வரசன் திருமகனுகத் தோன்றிய வன் ‘**நமி**’ எனும் நம்பி. அவ்விளவரசன் தனக் குள்ள பக்தி மிகுதியால் எப்பொழுதும் அருகனைப் பாடிய வண்ண மிருப்பான். தன்னை மறந்து அவன் பாடும் இசைப்பாக்கள் கல்லையும் கரைக்கும் தன்மை பெற்று விளங்கின. மாவும் புள்ளும் தம்மை மறந்து இன்புற்றன. பட்ட மரங்களும் விட்டுத் தளிர்த்தன. அமரரும் தம் அமுதினை மறந்து இவ் விசையமுதை உண்டுகளித்தனர். கின்னரர் மெய்ம் மறந்தனர். அருகனை வணங்க வந்த ஆதிசேடனும் இவ்விசையில் களித்து, இளவரசனுக்கு ஒரு வர மளிக்க விரும்பினுன். நமியும், தேவர்கள் அடை யும் செல்வத்தை, இவ்வுலகிலே தான் அடைய வேண்டும் என்று வேண்டினுன். அவ்வாறு வர மளிக்க இசைந்த ஆதிசேடன், தேவனுகுந் தன்மை அடையும் மந்திரத்தைக் கற்பித்தான்; அவ்விள வரசனுக்குத் தக்க இளவரசியையும் படைத்து, அவர் கள் ஆட்சிக்குரிய நாடாக வெள்ளியங்கிரியையும் அமைத்துத் தந்தான். அன்றிலிருந்து மேருமலைச் சாரலில் விஞ்சையர் உலகம் ஏற்பட்டது. அன்று முதல் நமி அரசன் பெரும்புகழ் பெற்று விளங்கி னுன். அவன் குலத் தோன்றல்தான் எம் சுவலன

சடியரசன். ஆக விஞ்சையரும் மண்ணுலகினரே. ஆதலால், சடியரசர்க்கும் தங்கட்கும் நடக்க இருக்கும் சம்பந்தம் பெரிதும் போற்றுதற்கு உரியதாகும்'' என்றனன்.

பயாபதி குலப்பெருமை

பயாபதி இதற்கு மறுமொழி கூற முற்பட்டான். அதற்குள் அங்கிருந்த புரோகிதன் ஒருவன் எழுந்து, தூதனை நோக்கி, ''தூதுவ, நும் விஞ்சையர் அரசன் குலப்பெருமை பாராட்டிய நீ எங்கள் அரசன் குலப்பெருமையை அறிதலும் சாலச் சிறந்ததாகும்'' என்று கூறிச் சொல்லலானான்:

''எல்லாம் வல்ல இறைவன் அருளால் இவ்வுலகினைப் பாதுகாக்கும் பொருட்டுப் படைக்கப்பட்ட அரசன் 'வாகுவலி'. அவன் பெயரே அவன் திறமையை விளக்கி நிற்கிறது. அவன் ஆட்சி அவனுக்குப்பின் வந்த அரசர்கட்கோர் எடுத்துக்காட்டு. அவனைப் பின்பற்றி நடந்ததால் நீதிமன்னர் என்று பெயர் பெற்றோர் பலர். அத்தகைய அரசன் உரிய காலத்தில் தன் ஆட்சியைத் தன் மகனுக்கீந்தான்; மரவுரி தரித்துச் சடைமுடி தாங்கித் தவமியற்றினான். அவன் தவத்தின் தன்மை சொல்லுந் தரத்ததன்று. அவன் தவாக்கினியால் விண்ணும் அனல் வீசிற்று. அசைவற்று நின்ற அவன் திருமேனியை மரத்தின் பராரை என்று கருதிக் கொடிகள் பற்றிப் படர்ந்தன. அவன் பாதங்களைப் பற்றிப் பெரும்புற்றுக்கள் மேலோங்கி வளர்ந்தன. அப்புற்றுக்களில் விடநாகங்கள் பயின்று குடியேறின. அவன் சடைமுடியைக் கூடெனக் கருதிக் குருவிக் குழாங்கள்

முட்டையிட்டுக் குஞ்சு பொரித்தன. இந்நிலையில் நெடுங்காலம் கடுந்தவம் புரிந்து பரமன் அருளால் தேவர்க்குத் தேவன் ஆயினுன். அவ்வாகுவலியின் குலத் தோன்றலே எம் பயாபதி மன்னன்.''

இருகுலமும் ஒருகுலம்

''அங்ஙனம் அருந்தவம் புரிந்த பெருந்தகை அண்ணல் வாகுவலி, எங்குல முதல்வனுகிய கச்சனின் மருமகன் என்று புராணங்கள் கூறுகின்றன. பண்டுதொட்டு இன் று வ ரை இருகுலத்திற்கும் தொடர்பிருப்பதால் இப்பொழுது எதிர்பார்க்கும் மணமும் புதிதன்று எனத் தோன்றுகிறது'' என்று விஞ்சையர் தூதன் விளக்கம் கொடுத்தான்.

பயாபதியின் முடிவு

இத்துணைப் பெருமித உரையையும் கேட்டிருந்த பயாபதி மன்னன் இறைவனின் திருவருளை எண்ணி, 'பேரறிவாள! உலக அறநூல் நிலைச் சிறப்பும் உயர் குடிப் பிறப்பும் உம்மிலும் உணர்ந்தவருளரோ!' என்று தன் மனத்திற்குள் புகழ்ந்தான்.

பின், அமைதியோடு அவையில் உள்ளோரை நோக்கி, ''ஆட்சி ஓர் எந்திரம்; அவ்வெந்திரத்தின் கண், காது, வாய் முறையே அமைச்சர், ஒற்றர், தூதுவர்; தாள்களும் தோள்களும் முறையே வழித் தோன்றல்களாகிய இளவரசர்களும், உற்றுழியுதவும் உழுவ லன்பினரும் ஆவர். அவ்வெந்திரம் இயங்குதற்கு இன்றியமையாத பகுதி மெய்யறிவு தரும் அரசியல் நீதிநூல் என்று கருதப்படும்.

‘மந்திரக் கிழவர் கண்ணு,
மக்கள்தன் தாள்க ளாகச்
சுந்தர வயிரத் திண்தோள்
தோழராச், செவிகள் ஒற்ரு,
அந்தர உணர்வு நூலா,
அரசுஎனும் உருவு கொண்ட
எந்திரம், இதற்கு வாயாத்
தூதுவர் இயற்றப் பட்டார்.’

“இவ்வுறுப்புக்களுள் அமைச்சர்களாகிய கண்களினும் சிறந்தவன் தூதனே. அவனே தன் நாட்டைக் காத்துத் தன் அரசனுக்குப் பேரும் புகழும் அளிப்பவன். அத்தகைய ஆற்றல் பெற்றவரே விஞ்சையர் தூதரும்” என்று கூறினுன்.

பிறகு, தூதனை நோக்கி, “விஞ்சையர் தூத, நும் பேச்சு வன்மை எம்மை மகிழ்வித்ததை எண்ணிப் பெரிதும் போற்றுகிறேன். உங்கள் அரசன் கருத்தினை யாம் ஒப்புக்கொண்டதாகக் கூறுக,” என்று உரைத்து ஒரு திருமுகமும் அனுப்பி வைத்தான்.

சடியரசன் மகிழ்வு

மண்ணுலகு சென்ற தூதன் மீளும்வரை சடியரசன் உள்ளம் ஒருநிலையில் இல்லை. மண்ணுலகினர் விஞ்சையரை அவமதித்து விடுவரோ என்ற ஐயம். இருந்தாலும் தூதன் வருகையை அரசன் ஆவலோடு எதிர்நோக்கினுன்.

தூதுவன் விஞ்சையர் உலகம் மீண்டான்; அரசனைத் தனியே சந்தித்துத் தான் மண்ணுலகு சென்று திரும்பியது முடிய நிகழ்ந்த நிகழ்ச்சி யாவற்றையும் ஒன்றுவிடாமல் எடுத்து விளக்கினுன்.

அத்துடன் அமையாது பயாபதி அரசன் இயல்பும் திறனும் சடியரசன் உளங்கொள எடுத்துரைக்கின்ருன் :

"அரசே, யான் தூதனுக அலுவல் ஏற்ற பின் பல அரசர்களைச் சந்தித்துள்ளேன். ஆனல், பயாபதி போன்ற ஒரு மன்னனை இதுவரை கண்டதில்லை. அவன், ஆணை செலுத்துவதில் எரியுந் தழல்; அருள் ஈகையால் உடலையும் உள்ளத்தையும் குளிர்விக்கும் தென்றல்; பண்பால் பெரியன்; நட்பில் பணிந்து இளையோன் போன்று விளங்குபவன்; தன்னை எதிர்க்கும் அரசர்க்கு அரியன்; தன்னை அண்டியோர்க்கு எளியன்.

'எரியும் ஆணையால்; குளிரும் ஈகையால்;
பெரியன் பெற்றியால்; சிறியன் நண்பினல்;
அரியன் வேந்தர்கட்கு; எளியன் ஆண்டையர்க்கு;...'

"செங்கோல் வேந்தே, பயாபதி தன் குடிகள் இன்புற்று வாழ்வதே தன் இன்ப வாழ்வெனக் கருதுபவன்; அவர்கள் அடையும் துன்பத்தைத் தான் அடைந்த துன்பமாக எண்ணி ஏங்குபவன். ஆதலால், அவ்வரசனின் அருள்திறன் சொல்லுந் தரத்ததன்று. அவன் அருள்திறன் கண்டு உணரத் தக்கதாகும்.

'வையம் இன்புறின் மன்னன் இன்புறும்;
வெய்யது ஒன்றுறின் தானும் வெய்துறும்;
செய்ய கோலினுய்! செப்ப லாவதன்று
ஐய தாரினுன் அருளின் வண்ணமே.'

"அம் மன்னன், மக்களுக்கு உயிர் மன்னன் என்று கண்டுளான். மக்களாகிய உடலுக்குத் தவறியும் தீங்கு வந்துவிடுமோ? அரசனுகிய உயிர்

தன்னையும் அறியாமல் நீதி வழுவினுல் என் செய்வது? வழுவ நேரிடில் மக்கள் துன்புறுவார்களே என்று நினைந்து அவன் கண்படுவதில்லை.

‘வீவில் அங்கண்நீர் வேலி வாழ்பவர்க்கு
ஆவி யாயவர் அரசர்; ஆதலால்
காவல் ஓவும் கொல்என்று கண்படான்;
மாவல் தானைஅும் மன்னர் மன்னனே.’

“இவ்வளவு சிறப்பியல்பு வாய்ந்த பயாபதி தன் மகனுக்கு நம்பால் பெண்கொள இசைந்தது யாம் பெற்ற பெரும் பேருகும்.

‘நங்கை அங்கவன் நலத்திற்கு ஒப்பவள்;
இங்கு இவட்குவேறு ஏந்தல் இல்லையால்!...’”

என்றுரைத்தான் தூதன்.

சடியரசன், பயாபதியின் பரந்த புகழைக் கேட்டுப் பெருமையுற்ருன்; தன் மகளைக் கொள்ள இசைந்தமை அறிந்து பெரிதும் மகிழ்ந்தான்; தூதனுக்கும் வேண்டியாங்கு வெகுமதி அளித்துச் சிறப்பித்தான்.

அவையின் முடிவு

அடுத்துத் தன் அவையைக் கூட்டி, ஆகவேண்டியது குறித்து ஆலோசித்தான். அவையில் கூடியிருந்த யாவரும் ஒருமனதாக, நிமித்திகன் சதவிந்து கூறியாங்குச் சில நாட்களில் திவிட்டன் ஓர் அரியினை அழிப்பதை அறிந்தபின், மகட்கொடை சிறந்ததாகும் என்ற முடிவுக்கு வந்தனர். திவிட்டனின் தீரச் செயலைத் தெரிந்துவர ஓர் ஒற்றனையும் சுரமை நாட்டிற்கு அனுப்பி வைத்தனர்.

5. திறைபெறு தூது

சதவிந்து நிமித்திகன்

சுதவிந்து யாவர்க்கும் பொதுவான நிமித்திகன் ஆயினும், அச்சுவகண்டனால் ஆதரிக்கப் பெற்றான்; அவன் அவைக்கள நிமித்திகனாக விளங்கினான். ஆதலால், நிமித்திகன் தான் முக்கால உணர்வால் அறிந்த உண்மையைத் தன் அரசர்க்கு உணர்த்துவது தன் கடனென நினைத்தான்.

அச்சுவகண்டன் பெயர் கேட்ட அளவிலே பகைவர் நடுநடுங்கித் திறையளந்து தலைவணங்குவர். ஆகையின், அச்சுவகண்டன் செருக்கில் ஆழ்ந்து தன்னை மறந்தான்; ஆட்சியை அமைச்சர்களிடம் ஆளவிட்டான்; அழகியர் ஆடலில் ஆழ்ந்தான்; ‘செங்கதிரோன் வெம்மையும், வெண்கதிரோன் தண்மையும் பெற்றுள்ளன’ என்ற உலகியல் உண்மை அறிவும் இழந்தான்.

> ‘ மின்னும் செங்கதிர் மண்டிலம் வெய்து,ஒளி
> துன்னும் திங்கள் பனிச்சுடர் தண்ணிது
> என்னும் இத்துணை யும்அறி யான்........’

ஆதலால், இந்நிலை, எந்த நேரத்திலும் அவன் ஆட்சியைக் கவிழ்க்கும் கருவியாய் அமைந்திருந்தது.

நிமித்திகன் இதை நன்கு உணர்ந்திருந்தான்; தன் முக்கால உணர்வால் அச்சுவகண்டனுக்கு அமைந்து கிடந்த பகையையும் அறிந்திருந்தான்;

குறையையும் பகையையும் எடுத்துக்காட்டி அவனைத் திருத்த முயன்றான்.

நிமித்திகன், அரசன் தனித்திருந்த தருணம் நோக்கிச் சென்று, அவனை வாழ்த்தி நின்றனன். அரசன் நிமித்திகனை அண்மையில் அமரச் செய்து வருகைபற்றி வினவினான். நிமித்திகன், தான் சில உறுதிமொழிகள் கூற வந்ததாகவும், அதைக் கேட்டுக் கோபியாதிருக்குமாறும் மிகப் பணிவோடு கேட்டுக்கொண்டான். அரசன் அனுமதியும் கிடைத்தது.

''அரசே, புறப்பகை கடந்து வெற்றிமாலை சூடி வாழ்கின்றனை. ஆனால், காமம் முதலிய அகப்பகை கடந்திலை; கடந்த பின்னன்றோ நீ யாவரினும் சிறந்து விளங்குவை. அப்பொழுது எப்பகையும் இல்லை என்று கூறலாம். அகப்பகை அரு நாட்டின் செல்வம் பகலவனைக் கண்ட பனிப்படலமென மாறும். 'அகப்பகை அடாது, அழிந்த அரசர்கள் வரலாற்றை எண்ணிப் பார்க்க வேண்டும். அதுவே ஆறு செல்லும் அரசர்க்குப் பெருந்துணை ஆகும்' என்று நீதி நூல்கள் முழங்குகின்றன. இத்துணையும் தாங்கள் அறியாததன்று. மன்னிக்கவும்.

"மன்னர் மன்ன, குறிப்பாகக் குறிப்பிடத் தக்க ஒன்றை மறந்துவிட்டேன். மண்ணுலகிலுள்ள சுரமை நாட்டு இளவரசர்களாகிய விசயதிவிட்டர்களில், திவிட்டன் ஆகூழால் பெருவலியோடு விளங்குகிறான். அவன் உங்கட்குப் பகையாவன் என்று என் முக்கால உணர்வால் உணர்கிறேன்" என்றான் நிமித்திகன்.

அரசன் குறுக்கிட்டு, "என்ன கூறுகின்றாய்! எனக்குப் பகைவனா?" என்று கேட்டுக்கொண்டே கண்ணில் அனற்பொறி பறக்க, புருவம் துடிக்கப் பற்களை நறநறவெனக் கடித்தான்; தோளொடு தோள் புடைத்துநக்கான். மேலும், "என்னைப்பகைத்து வாழ்பவனும் உண்டோ? அதுவும் ஒரு மானுடன்! இந்திரன் ஏவலால் அவன் வச்சிராயுதம் மலைகளை அழித்துப் பொடி படுத்தும். அதுபோல் என் ஆணையால், தேவராயினும் பகைவரைத் துகள் படுத்துவது என் ஆழிப்படை என்பதை நீ அறியாயோ? உன் முக்கால உணர்வும் உன் சோதிட நூலும் நிச்சயம் பொய்த்து விடும் என்பது உண்மை. மீண்டும் இவ்வாறு சொல்லிக்கொண்டு நிற்காதே! ஓடிவிடு!" என்றான் அச்சுவகண்டன்.

"மன்னர் மன்ன! சீற்றம் வேண்டாம்; சிறிது சிந்தனையைக் கொள்ளுங்கள். ஏதோ என் முக்கால உணர்வில் பட்டதை உணர்த்தினேன்; சீற்றம் தணிந்து சற்று உன்னிப் பாருங்கள். மீண்டும் வேண்டுகின்றேன்: தவறாக எடுத்துக்கொள்ளற்க!" என்று பணிவோடு கூறினான் நிமித்திகன்.

"அதை என்னிடம் சொல்ல வேண்டாம். வேண்டுமானால் அமைச்சர்களிடம் சென்று சொல்; நிற்காதே இங்கு. செல்" என்றனன் சீற்றந் தணியா அச்சுவகண்டன்.

அமைச்சர்களின் ஆழ்ந்த சிந்தனை

நிமித்திகனின் முன்னறிவிப்பை அறிந்த அமைச்சர்கள் அவ்வறிவிப்பை அலட்சியப்படுத்தவில்லை.

செயற்படும் நிகழ்ச்சியாகக் கூடும் என்று ஐயுற்ற னர்; ஆழ்ந்தனர் சிந்தனையில். அனற்பொறி சிறிதா யினும், அது கனலும் வாய்ப்பளித்தால் இவ் வுலகையே அழித்துச் சாம்பராக்கும். அதுபோல் வலிகுன்றிய பகைவராயினும் வாய்ப்புக் கிட்டுமேல் வலிபெற்று வாகை சூடுவர்.

‘ இளைதாக முள்மரங் கொல்க களையுநர்
கைகொல்லுங் காழ்த்த விடத்து ’

என்று கூறுவது போன்று, நம் பகைவர் எனக் கருதப்படுபவர் வலிபெற்று நம்மை எதிர்க்குமுன் முளையில் கிள்ளி எறிதலே ஏற்புடைத்தாகும் என முடிவு செய்தனர்.

ஆயினும், அச் சுரமைநாட்டினர் நம் பகைவரா, நொதுமலரா, அன்றி நண்பரா என்பதை அறியா மல் அவர் நாட்டின்மேல் படையெடுத்தல் தகாது. நண்பர்களைப் பகைவர் என்று கோடலும், பகைவர் களை நண்பர் என்று கோடலும் ஏற்புடைத்தன்று. இவ்விரண்டுமே கடைமுறையாம் துயரந்தரும்.

‘பகைய லாதவ ரைப்பகை யாக்கலும்
நகையில் தீமனத் தாரைநண்பு என்னலும்
முகையின் வேய்ந்தமென் மொய்ம்மலர்க் கண்ணியாய்!
மிகையின் மற்றவை பின்னை வெதுப்புமே.’

ஆகையால், அவர்கள் பகைவரோ நண்பரோ என்பதை முதலில் அறிய வேண்டும். அவர்க ளிடம் தூதரை அனுப்பிப் பல ஆண்டுகளாகத் தீர்க் கப்படாத திறைப் பொருளைக் கேட்டலே சிறந்த வழியாகும் என்று கண்டனர்; அரசன் உளத்தே அமையும் வண்ணம் எடுத்துரைத்தனர். அவன்

ஏவலின் நான்கு தூதர்களைத் திருமுகத்துடன் சுரமை நாட்டிற்கு அனுப்பினர்.

போதனமாபுர அரண்மனை

அச்சுவகண்டன் தூதர்கள் வருகையை அறிந்த பயாபதி, ஏதோ ஆபத்து வந்ததாக எண்ணி, அஞ்சி நடுநடுங்கி விட்டான்; இருந்தாலும், அச்சத்தை வெளிப்படுத்தாது அடக்கிக்கொண்டு, தூதர்களை உள்ளே வரும்படி அனுமதித்தான். தூதர்கள் உள் நுழைந்து அரசனை வாழ்த்தித் திருமுகத்தை நீட்டினர்.

''பல்லாண்டுகளாக அளிக்கப்படாத திறைப் பொருள்களைப் பெறத் தூதர்களை அனுப்பியுள்ளேன். ஆயிரங்கோடி பொற்காசும், ஆயிரம் ஆடல் அழகியரும், முத்துப் பவளம் முதலிய மணிக் குவியல்களும், உயர்ந்த பொன்னுடைப் பொதிகளும் கப்பமாக அளித்திடுக; யானைத் தந்தங்களும் சாமரையும், இன்னும் புதுப் புதுப் பொருள்கள் உண்டேல் அவைகளையும் திறையாக விடுத்திடுக!'' என்று அக்கடிதம் அறிவித்தது.

அறிவிப்பு அரசனின் ஆத்திரத்தைத் தூண்டி விட்டது. எனினும், அதைச் செயற்படுத்தும் துணிபு பயாபதிக்கு இல்லை. அச்சுவகண்டன் ஓர் அருங்கண்டமாக மாறிவிடுவான் என்று அஞ்சினன். அன்றித் தலைவிதியில் ஆழ்ந்த நம்பிக்கை உடையவன் ஆகையால், தன் தலைவிதியை எண்ணி நொந்துகொண்டான்; தன் முன்னோர்களாலும் தவிர்க்க முடியாத தலைவிதியைத் தானும் தடுக்க

முடியாது என்ற தடுமாற்றம் அடைந்தான். உள்ளம் திறை கொடுக்க இசைந்துவிட்டது!

அச்சுவகண்டன் ஆணைப்படி எல்லா வகையான திறைப் பொருளும் வந்து குவிந்தன. இப்பொருளைக்கொண்டு செல்லும் தூதர்கள் தன் இளவரசர்களாகிய விசயதிவிட்டர்கள் அறியாதவாறு செல்லும்படி ஆணை பிறப்பித்தான். தூதர்களும் அவ்வாறு செல்ல முயன்றனர். ஆனால், முயற்சி வெற்றி அளிக்கவில்லை!

நகர் உலா வந்துகொண்டிருந்த இளவரசர்கள், தூதர்கள் திறைப்பொருள்களோடு கூட்டமாகச் செல்வதைக் கண்டுகொண்டனர்; உண்மை அறிய விரும்பினர். அங்கிருந்தோரிற் செய்தி அறிந்த எவரும் அரசனுக்கு அஞ்சி உண்மை உரைக்காது மலைத்துநின்றனர். ஆனால், பக்கத்து மலையிலிருந்து அந்நகருக்கு வந்திருந்த ஒரு குறத்தி துணிவோடு உண்மை உரைத்தாள்.

"உத்தரசேடியை ஆளும் அச்சுவகண்டன் எண்திசையும் புகழ் பரவ வாழ்பவன்; அவன் இன்று நம் பயாபதி மன்னரிடம் திறைபெறத் தூதர்களை அனுப்பினான். நம் அரசனும் அவன் ஆணைக்கு அஞ்சித் திறை அளந்துள்ளான். அத்திறைப் பொருள்கள்தாம் இங்குக் கொண்டு செல்லப்படுபவை" என்று பணிவோடு கூறினாள்.

கேட்டு நின்ற திவிட்டன் கண் சிவக்க, உடல் துடிக்க மணி இழந்த நாகம்போல் சீறி எழுந்தான். சீற்ற நகை எழுந்தது. "விஞ்சையர்க்குத் திறை அளந்தால்தான் நாம் சுரமைநாட்டை ஆள முடி-

யுமோ ? இன்றேல் ஆளமுடியாதோ ? அப்படி என்ருல் எங்கள் தோள் வலியாலும், வாள் வலியாலும் பயன்தான் என்ன ? அரசன் என்ற பட்டம் எங்கட்கு எதற்கு ? இப்பொழுதே அதைப்பற்றிய முடிவுக்கு வந்துவிடுகிறேன் ’’ என்று சொல்லிக் கொண்டே திறைகொண்டு செல்லும் தூதர்களைத் தடுத்துவிட்டான்.

“தூதர்களே ! திட்டிவிடத்தின் பட நடுவண் அமைந்த அருமணியைப் பறிக்கப் பாயும் பேதையைக் கேள்விப்பட்டதுண்டோ? எங்களிடம் திறை பெற அனுப்பிய உங்கள் அரசனும், அத்தகைய பேதையினும் பேதை ! பொருள்பெறும் விருப்பினனுய், அரசர்களை அச்சுறுத்தி அவர்கள் அரிதில் தேடிய பொருளை எளிதில் கவர்தல் இனி இயலாதாகும். உங்கள் அரசனுக்கு எங்கள் பொருள் வேண்டுமாயின் அவனே நேரில் வரட்டும். அவன் ஆவல் தீர அம்புமாரியைச் சொரிந்து, அவனை அமரர் உலகு அடைவிப்போம். உடனே புறப்படுங்கள் ; அறிவியுங்கள் உங்கள் அச்சுவகண்டனுக்கு ! பொருளைக் கைவிட்டு உயிரைக் கைப் பற்றி ஓடுங்கள்! ’’ என்று படபடத்துக் கூறினுன்.

தூதுவர் என் செய்வர் கையில் படையில்லாது ? தப்பினேம் பிழைத்தோம் என்று பறந்தனர். ஆனுல், பயாபதி திவிட்டனின் தீரச் செயலைப் போற்றவும் முடியாது, தூற்றவும் முடியாது, யாது நிகழுமோ என்று புழுங்கிக்கொண்டிருந்தான்.

6. அரியமர்

அமைச்சர் ஆலோசனை

விசய திவிட்டர்களால் வெருட்டப்பட்ட தூதர்கள் அச்சுவகண்டனிடம் செல்லாது நேரே அமைச்சர்களிடம் சென்றனர்; தாங்கள் சுரமை நாடு சென்று திறை கேட்டதையும், பயாபதி பயந்து திறையளந்ததையும், திறை கொண்டுவரும் வழியில் விசயதிவிட்டர்கள் திறைப் பொருளைக் கவர்ந்ததோடு, தங்கள் அரசனை இழிவுபடுத்தி அமருக் கழைத்ததையும் ஒன்றுவிடாமல் எடுத்துக்கூறினர்.

கூறியதுகேட்ட அமைச்சர்கள் யாவரும் ஒன்றுகூடிச் சிந்தித்தனர்; அரசன் அடங்காச் சினம் கொள்வான் என்று அவனுக்கு அறிவிக்க அஞ்சினர். அமைச்சர்களில் சிறந்த அரிமஞ்சு தம் பகையை வெல்லும் வழியைக் கூறினான்; திவிட்டன் இளைஞன் ஆகையால் அவனைத் தந்திரந்தால் வெல்வதே எளிதென்பதை எடுத்துக்காட்டினான்; அரிகேது எனும் மாயம் வல்ல விஞ்சையனை அழைத்து அரியுருக்கொண்டு சுரமை நாட்டை அழிக்கும்படி அனுப்பினான்; திறை கொணரச் சென்ற தூதரையே மீட்டும் அனுப்பித் திவிட்டனுக்கு அறிவிக்கச்செய்தான்.

அரியின் அடாத செயல்

அமைச்சன் ஆணையை ஏற்ற அரிகேது அரிமா வாயினான். கோடை இடியென முழங்கும் பேழ்

வாய் ; மூன்றும் பிறை என வளைந்து ஒளிவீசும் பற்கள் ; கனற்பொறி சிந்தும் கடுவிழி ; சிலிர்த்து அச்சுறுத்தும் பிடரிமயிர் ; கடுங்கற் பாறையையும் அடித்துப் பிளக்கும் வல்லுகிர் ; நீண்டு உயர்ந்த உடல் ; நிமிர்ந்த தோற்றம்—இத்தனையும் கொண்டு எழுந்தது அரியேறு. மேருமலைச் சாரலிற் புறப்பட்டு, இமயமலைச் சாரலைக் கடந்து, சிந்து நதி பாயும் சுரமை நாட்டை அடைந்தது. கோபாவேசத்தில் கர்ச்சித்த அதன் கர்ச்சனை கருங்கடல் ஒலியையும் தோற்கடித்தது. காட்டிலுள்ள மரம், செடி, கொடிகள் தரையோடு அதிர்ந்து நடுங்கின ; வனவிலங்குகள் உடல் சோர்ந்து உளஞ் சோர்ந்தன ; களிறுடு பிடிகள் கண்மூடி மெய்கலங்கிப் பிளிறின. அரிமாவின் அடி தாங்காது பாறைகள் நொருங்கிப் பொடியாயின. இச் சீயத்தின் வெடிப்பொலி கேட்ட வேடுவர் உள்ளம் வெதும்பினர். சுரமை நாட்டின் காடுகளும், விலங்குகளும் அழிக்கப்பட்டு, நாடும் அழியுமோ என்று யாவரும் அஞ்சினர்.

திவிட்டன் அறிதல்

திறை பெற வந்த தூதுவர் போதனமாநகர் அடைந்து திவிட்டனைத் தேடிக்கண்டனர் ; கண்டதும் பணிந்தனர். தூதுவர் வருகைக்குக் காரணம் அறியாது திவிட்டன் திகைத்தான். தூதர்கள் பயாபதியிடம் திறை பெற்றதும், திவிட்டன் தடுத்துப் பறித்ததும், பறித்தமை தம் அரசர்க்கு உணர்த்தியதும், அரசன் கடுத்துத் திவிட்டன் சிறுவன் பொர விரும்பாததும், சீயத்தை அனுப்பிச்

சுரமை நாட்டை அழிக்கச் செய்ததும், 'சிறியன் வலியனுயின் சீயத்தின் வலி அடக்கச்செய்க' என்று இயம்பத் தம்மை ஏவியதும் விடாது எடுத்துரைத் தனர்.

கூறி முடிப்பதற்குள் அங்கு வந்த பொது மக்களும் இளவரசனைப் பார்த்து, "குமர, நமது சிந்து நாட்டினைச் சிந்தச் செய்கின்றது ஒரு சீயம்; விலங்குகளைக் கொன்று குவிக்கிறது. எதிர்ப்படும் வேடரையும் விடுவதில்லை. ஆதலால், அதனை அணுகி அழிப்பவர் காணேம். கொண்டலும் அஞ் சும் குமறலைச் செய்கின்றது; இமயமலைச் சிகரத்து ஒரு பெரு முழையுள் உறைகின்றது. அதன் சிங்கப் பல்லொளி குகை முழுதும் வீசுகின்றதாம்" என்று முறையிட்டனர்.

திவிட்டன் இவற்றைக் கேட்டு வெகுண்டு எழுந்தான். அவன் தோள்கள் துடித்தன. "யான் என் தோள்களையே படைக்கலமாகக் கொண்டு கோளரியைக் கொன்று குவிப்பேன்; பிலமென ஆழ்ந்த அதன் வாயினைப் பிளந்தெறிவேன்; உட லம் கிழித்துக் குருதி பெருக்கிடுவேன். இன்றேல், அச்சுவகண்டன் ஏசிய இளமகனே ஆகுக யான்!"

'ஆயின் மற்றதன் அரும்வரைப் பிலமென அகன்ற
வாயைப் போழ்ந்துஉடல் இருபிளப் பாய்வகுத் திடுவல்
ஏயிப் பெற்றியே விளைத்தில ஞயின்நும் வேந்தன்
பேயில் பேசிய பிள்ளையே யாகென்று பெயர்ந்தான்.'

என்று சூளுரைத்தான்; அவனுடன் சென்ற படை களையும் தவிர்த்தான்; விசயன்மட்டும் பின்தொடர்ந் தான். இருவரும் குதிரை வீரராகச் செல்லவில்லை. நடை வீரராகவே நடந்தனர்; குகையை அடைந்

தனர். இவர்கள் வருகை அறிந்த வாளரி கோளரி யாய், கோடை இடியென முழங்கிற்று. திவிட்டன் அஞ்சினுன் இல்லை; எதிர் முழக்கமிட்டான். இம் முழக்கம் அம்முழக்கத்தை அடக்கிற்று. இயங்கியற் பொருளும், நிலையியற்பொருளும் நிலைகுலைந்தன. தேவரும் யாவரும் அஞ்சினர். இந்திரன் தன் வச்சி ராயுதத்தால் மேருவைப் பொடி செய்தனனே என நடுங்கினர். மாயச்சிங்கம் மதி மயங்கிற்று; மன்ன னைக் காண அஞ்சி ஓடிற்று. விட்டான் அல்லன் திவிட்டன்; பின் தொடர்ந்தான்; காற்றினும் கடுக ஓடினுன். ஓட்டத்தில் அவன் கால்கள் பூமியில் பாவினவோ இன்றே என ஐயுற்றனர் இமையோர். எண்டிசைகளும் சுழன்றன.

மரங்கள் வேர் பறிந்து பறந்தன. விலங்குகள் விளிந்தன. விண்ணிற் பறக்கும் பறவைகள் நிலை யற்றன. சிகரங்கள் சிந்தின. அரிகேது (மாயசீயம்) எஞ்சல் கூடுமோ என அஞ்சினுன்; மெய்யரிமா உறையும் ஒரு குகையுள் நுழைந்து பதுங்கினுன். விடவில்லை திவிட்டன்; குகையின் முன்னின்று உலகமே செவிடுபட உரப்பினுன். உரப்பில் வெகுண்ட உண்மைச் சீயம் வெளிப்பட்டது; திவிட் டனைக் கண்டு கண்களில் தீப்பொறி பறக்க, வள் ளுகிர் நீட்டி வாய் பிளந்து உரப்பி அவன் மார் பினைத் திறந்து உதிரம் பருகுவான் பாய்ந்தது. இக் காட்சியைக் காண அஞ்சி இமையவரும் இமைத்தனர். திவிட்டன் இமையா நாட்டத்த னுய்க் கோளரிமேல் தாவினுன். கைகள் இரண்டும் பேழ்வாய்ப் புகுந்து கிழித்தன. உரப்பிய உதிரம் கக்க இரண்டு பிளவாக வீழ்ந்தது கோளரி.

‘வளைந்த வாளெயிற் றிடைவலித் தடக்கையின் பிடித்தான்
பிளந்து போழ்களாய்க் கிடந்ததுஅப் பெருவலி யரியே.’

பாவம், மெய்யரி மாள, பொய்யரி போய்ப் பதுங்கிற்று; திவிட்டன் கண்ணிமைத்த நேரம் பார்த்து விண் பாய்ந்து விஞ்சையருலகம் புகுந்தது!

மீட்சி

வெற்றி வீரன் தன் வீரச் செயலை எண்ணி வியந்திலன்; உவத்தலுமிலன்;

“யாதும் மற்றதற்கு உவந்திலன் வியந்திலன் இகலோன்.”

தன் அண்ணன் வருகை நோக்கி ஆவலோடு நின்ருன்; தூரத்தில் வரும்போதே சிங்கம் மாய்ந்து கிடப்பதையும், திவிட்டனின் பெருமிதத் தோற்றத்தையும் கண்டு களிகூர ஓடி வந்து தம்பியைத் தழுவிக் கொண்டான்; மகிழ்ச்சிப் பெருக்கில் ஊமை யாயினன். சிறிது நேரத்தில் உணர்வுற்றுத் திவிட்டனும் தானும் அண்மையில் இருந்த சோலையில் சென்று தங்கினர்.

சோலைக் காட்சி

அச் சோலை மலைச்சரிவில் அமைந்து வன விலங்கள் வாழ்விடமாக விளங்கியது. சோலையின் நடுவே அமைந்திருந்த பளிக்குப் பாறைகள் நீர் நிலைகள் போன்று காட்சி யளித்தன. அங்கமைந்த மரகதப் பாறைகளில் வண்டு மொய்க்க வீழ்ந்து கிடந்த எழில் மிகு பாலை மலர்கள் பாசிலை படர்ந்த பொய்கையில் வண்டு மொய்க்கும் வெண்டாமரை மலர்களை நினைவூட்டின. மதநீர் பொழிந்து

வெள்ளிய தந்தங்கள் மின்ன, மேகங்களென இடி முழக்குடன் காட்சி யளித்தன யானைக் கூட்டங் கள். கடல் நுரையென வெளிறிய மயிர்த் தொகை யுடைக் கவரிமான் கூட்டம் அணி அணியாக மலைச்சரிவின் மேல்நோக்கிச் சென்றன. அக் காட்சி வெண்ணிற மேகங்கள் படிந்து காற்றில் மெல்ல அசைவனபோல் காட்சி யளித்தன. சோலை யின் ஒரு புறத்தே கோளரி யொன்று மதகரியைப் புறம் போந்து தாக்கி மத்தகத்தைப் பிளந்துவிட் டது. கரி மலையெனச் சாய்ந்து மாய்ந்தது. மத் தகம் கக்கிய உதிரம் எங்கும் பரவிச் செங்களமாக் கியது. தலையிலிருந்து தெறித்த முத்துக்கள் எங்கும் பரவிக் கிடந்தன. தந்தங்கள் ஒருபுறம் ஓடி வீழ்ந் தன. இத் தோற்றம் அந்தி வானில் தோன்றும் பிறை மதியையும், அதன் பின் ஒளிரும் சில நாண் மீனையும் ஒத்திலங்கின. எல்லோரும் இக் காட்டு மன்னன் என்று சொல்லும்படி, புலி, சிங்கம், கரடி முதலிய கூட்டங்கள் தலைநிமிர்ந்து திரிந்துகொண் டிருந்தன. இக் காட்சிகளுக் கிடையில் பச்சை நீல மயில் ஒன்று மாணிக்கப் பாறையில் நின்று தன் தோகை விரித்தாடிற்று. அதன் ஆடலுக்குப் பின்னணியாக மலை மூங்கில் குழல் இசைத்தன; வண்டினம் பாடின; மேகங்கள் முழங்கின.

இளவரசர் இருவரும் ஒவ்வொரு காட்சியாகக் கண்டு, கடைசியில் மயிலாடும் நடன அரங்கிலே இமையாநாட்டத்த ராயினர். இமையாராகிய இள வரசர்கள் இமைப்பவராய் இசை பாடினர். செயற்கை இசையின் வேறுபாடறிந்த இயற்கை நடனம் நின்று விட்டது. இவர்கள் இசையும் நின்று

விட்டது. இயற்கை நடனம் நின்ற ஏமாற்றத்தில், ஏமாற்றமும் ஒரு நன்மாற்ற மாயிற்று. இன்றேல், நகர் செல்லும் நினைவே பெற்றிரார்.

தம்பிக்குத் தமையன் உரை

நகருக்கு மீளும் வழியில் விசயன் திவிட்டனுக்குச் சில நீதியுரை புகட்டுகின்றான்:

"திவிட்ட, உன் பேராண்மை மண்ணவரேயன்றி விண்ணவரும் போற்றும் பெருமை பெற்றுளமை நம் நாட்டிற்கும் நம் அரசர்க்கும் ஒரு தனிப் புகழைத் தருவதாகும். நீதான் எதிர்கால மன்னர் மன்னன். மன்னர் மன்னன் தன் மன்னுயிர் துன்பம் நீக்கித் துன்புறுத்தலைக் கடமையாகக் கொள்ளவேண்டும். ஆதலால், இளவரசர்க்கு அதனினும் உயர்ந்த அறம் பிறிது காண்டல் அரிது.

'உரைசெய்நீள் உலகின் வாழும்
உயிர்களுக்கு உறுகண் கண்டால்
வரைசெய்தோள் மைந்தர் வாழ்க்கை
மதிப்பிலார் வனப்பின் மிக்கார்
திரைசெய்நீர் உலகம் காக்கும்
செய்கைமேல் படைக்கப் பட்ட
அரசர்தம் புதல்வர்க்கு ஐயா
அறம்பிறிது அதனின் உண்டோ?'

"இன்னலுறும் மன்னுயிரைக் கண்டும் தன்னுயிரே பொன்னுயிரெனக் கருதும் ஆண்மை மிக்க அரசன் ஆடவன் அன்று. அவன் ஓர் அழகுபெற்ற அலி.

'மன்னுயிர் வருத்தம் கண்டும்
வாழ்வதே வலிக்கு மாயின்
அன்னவன் ஆண்மை யாவது
அலிபெற்ற அழகு போலாம்.'

"நீயோ, நம் நாட்டை யழிக்கும் கொலையில் கோளரியைக் கொன்று குவித்தாய்; உனக்குறும் துன்பம் காணுய்; பிறர் துயரம் கண்டிரங்கிக் காக்கும் உன்போன்ருர் புகழன்ரே புகழ்! புகழ் பெறும் மன்னர்க்கு உடல் இரண்டு: ஊனுடல், புகழ் உடல். ஊனுடல், வினைப்பயனுல் தோன்றி அழிவது; புகழ் உடல், அவர் செய்யும் நல்வினையால் உருப் பெற்று என்றும் அழியாது மிளிர்வது.

'ஒருவனது இரண்டு யாக்கை,
ஊன்பயில் நரம்பின் யாத்த
உருவமும் புகழும் என்று ஆங்கு
அவற்றின்ஊழ் காத்து வந்து
மருவிய உருவ மிங்கே
மறைந்துபோம்; மற்றை யாக்கை
திருவமர்ந்து உலக மேத்தச்
சிறந்துபின் நிற்கு மன்றே.'

"உன் புகழ் உடம்பும் எல்லோராலும் புகழப்பட்டுச் சிறக்கப் போவதைக் காண்பாய்" என்று பாராட்டினுன். திவிட்டனும் இரண்டொன்றிற்கு மறுமொழி கூறிவர, இருவரும் அந்தி நேரத்தில் அக நகரடைந்தனர்.

இவர்கள் வருகையை எதிர்நோக்கிய அமைச்சர்கள் பட்டத்து யானையை அலங்கரித்து நாற் படையுடன் நின்றனர்: இளவரசர்களும் வர

வேற்பறிந்து செல்பவர் போன்று சென்றனர். பொதுமக்கள் அவர்கள் சென்று சேர்ந்ததைக் கண்டிலர்; கச்சையானைப் பிடர்த்தலை அமர்ந்ததைக் கண்டனர். பின் நகர்வலம் அயினி நீர் சுழற்றி, மங்கலம், பாடல் முதலிய சிறப்புக்களோடு அரண்மனை அடைந்தனர். அங்கு அரசன் ஆணை காத்திருந்தது. அரசன் அழைத்தமை அறிந்ததும் அரும்பெறல் மைந்தர்கள் அஞ்சினர், அனுமதி பெறவில்லையே அரியமர் புரிய என்ற காரணத்தால். ஆனால், குற்றத்தை ஒப்புக்கொள்ளுதலே குணமென மனவமைதி பெற்றுச் சென்றனர்.

மன்னன் இவர்கள் எதிர்பார்த்தவாறு சினங் கொள்ளவில்லை; மக்களை மார்புறத் தழுவிக் கொண்டு உவகைக் கண்ணீர் பெருக்கினன்; உச்சி முகர்ந்தான்; உவகைக் கடலுள் ஆழ்ந்தான்; தன் மக்களால் தான் பெறும் பேறெண்ணிப் பூரித்தான்; 'தம் ம்க்கள் நீடு வாழ்க!' என வாழ்த்தி அவர்கள் இருப்பிடம் அனுப்பினன்.

7. திருமணம்

சடியரசன் செய்தியறிதல்

சடியரசனால் அனுப்பப்பட்ட ஒற்றர்கள், திவிட்டன் கோளரியைக் கொன்று வீழ்த்திய செய்தி கொண்டு விஞ்சையர் உலகெய்தினர். சடியரசனைக் கண்டு, தாங்கள் போதனமாநகரில் மறைந்திருந்ததும், அச்சுவகண்டன் தூதர் திவிட்டனைக் கண்டு கொடுமைபுரியும் கோளரியின் நிலையைக் கூறியதும், அவன் வெகுண்டெழுந்து, சிங்கத்தைத் தொடர்ந்து சென்று தொலைத்ததும் ஒன்றுவிடாமல் எடுத்துக் கூறினர்.

ஆலோசனை

செய்திகேட்ட வேந்தனின் உள்ளம் உவகைக் கடலில் ஆழ்ந்தது. மகிழ்ச்சியில் மனம் மயங்கியிருந்தான்; பின், அமைச்சர்களை அழைத்து ஆலோசித்தான். அச்சுவகண்டனால் ஏற்படும் அல்லலைத் தடுப்பது குறித்து முதலில் சிந்தித்தனர். 'பயாபதி தலைநகராகிய போதனமாநகரில் திருமணம் நடப்பதாயின், அச்சுவகண்டன் எளிதில் தங்கட்குத் தொல்லை கொடுக்கமுடியாது; அவன் போருக்கு எழுந்தாலும் அவ்வளவு விரைவில் மறவரைக் கொண்டு மண்ணுலகடைய முடியாது; அப்படி வந்தாலும், வருதற்குள் திவிட்டனின் உதவியால் எதிர்ப்புப் படையை அமைத்து விடலாம்' என்று ஒருமனதாக முடிவு செய்தனர். ஆக,

மண்ணுலகில் போதனமாநகரில் திருமணம் நிகழ்த்துதல் சிறப்புடையது என்று ஒப்புக்கொள்ளப் பட்டது.

மணத்திற்குச் செல்வோர்

உடனே சடியரசன் தன் நண்பர்களான திவாகரதேவன், சித்திரரதன் முதலிய எட்டு மன்னர்களை அழைத்துத் தன் பொருட்டுத் தன் நகரைக் காவல் புரியும்படி வேண்டினன்; தன் தம்பி அமரபுரத்தரசனுகிய சுவலனரதனையும், மருமகன் அரிபுர மன்னன் வியாக்கிரரதனையும் திருமணத்திற்கு வரும்படி வேண்டினன்; தன் மகன் அருக்ககீர்த்தியையும் உடன்வரப் பணித்தனன். ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் நாற்படையுடனும், நல்லமைச்சர்களுடனும் புறப்பட முற்பட்டனர். சுவலனசடியின் அமைச்சர்களும், சேனை நாயகர்களும் புறப்பாட்டிற்குரிய ஏற்பாட்டினை மிக விரைவில் செய்து முடித்தனர்.

மணமகள் விமானம்

அரசன் தன் மகள் சுயம்பிரபை ஏறிச்செல்ல விமானம் ஒன்று அமைத்தனன். நவமணிகளான் இயன்ற அவ்விமானம் தன் ஒளியால் வானவில்லென விளங்கிற்று. அதன் நாற்புறத்தும் அமைந்த மகரமீன்களின் அங்காந்த வாயினின்றும் வெண்ணிலா என ஒளிவிடும் முத்துமாலைகள் தொங்க விடப்பட்டன. பட்டினுல் இயன்ற பன்னிறக் கொடிகளும், இடையிடையே பொன்னிறச் சூலங்கள் மின்ன, அவ்விமானத்தின் சென்னியில் துன்னி

இலங்கின. பொதுவாக விமானத்தின்முன் செல்ல, பகலவன் கண்களும் கூசின. கந்தருவர், வித்தியா தரர், கின்னரர், கிம்புருடர், மிதுனத் தேவர் முதலி யோர் திருவுருவங்கள் ஆங்காங்கே தீட்டப்பெற் றன. எண்ணமுடியாத அளவிற்கு அவ்விமானத் தில் நாடக அரங்கம், இசையரங்கம், தண்பொழில் சோலை, செய்குன்றம், மகளிர் ஆடிடம் யாவும் நிரு மிக்கப்பட்டன. மண்ணிலும், விண்ணிலும் இவ் விமானத்திற்கு இணை இவ்விமானந்தான்; 'தானே தனக்குவமை!' அரசனின் உள்ளக் கிடக்கை உள்ளவாறே உருவானதில் அவனுக்கே ஒரு பெரு மிதம். உடனே மகள் புறப்படக் கன்னிமாடத்திற்கு ஆணை சென்றது.

சுயம்பிரபை அணிபெறுதல்

நீலமணியால் அமைந்த கன்னி மாடத்துச் சுயம்பிரபை மின்னல் விடும் ஓர் அணி மயில்; அன்னமும் நடைபயிலும் மென்னடையாள். அவள் அரசனின் ஆணையை அறிந்தாள்; அகம் மகிழ்ந்தாள். தோழியர் பல்லாண்டு கூறினர். அயிற்படை ஏந்திய அரம்பையர் அனையார் காவல் புரிந்து செல்லத் தன் அன்னை இருக்கும் அந்தப்புரம் அடைந்தாள்; அன்னையின் அடிபணிந்தெழுந் தாள். அன்னை வாயுவேகை மகளை மார்புறத் தழுவி வாயார வாழ்த்தினள். தோழியர், சுயம் பிரபையை நறுமணங் கமழும் பனிநீரால் நீராட்டி னர்; மெல்லிய ஆடையால் ஈரம் புலர்த்தினர்; இழையிடை அறியாக் கொடியுடைத் துகில் உடுத்தி, அரதன மணிக்கலன்கள் அணிவித்தனர்; மதன்

கைவாளென ஒளிரும் விழிகட்கு நஞ்சென அஞ்சனம் ஊட்டினர்; எட்டாம் பிறைநுதற்கு நீல மணித் திலகம் இட்டு அணிசெய்தனர்.

விமானத்தில் புறப்பாடு

அணிபெற்ற நங்கை நல்லாள், நற்ருய், செவிலித் தாயரொடும், தோழியரொடும், காவல் மகளிர் பல்லோர் சூழ்வரப் புறப்பட்டாள்; தன் உயிரென வளர்த்த கிளி, பூவை, மான் முதலியவற்ருேடும் விமானம் ஏறினுள். பிரபை விளையாடும் பந்தும், கழங்கும், பாவையும், ஆடை அணிகலப் பேழையும், அஞ்சனச் செப்பும் சுமந்து சென்றனர் தோழியர்.

அரசனும் தன் ஐம்பெருங்குழு, எண்பேராயத்துடன் சுற்றஞ் சூழ அணிவகுத்துச் சுரமை நாடு நோக்கிப் புறப்பட்டனன்.

கன்னியர் ஈட்டமும், காளையர் கூட்டமும் சுரமை நாடு நோக்கி வான் வழியே சென்ற காட்சி இன்னவாறு இருந்ததென விளக்கும் தரத்தது அன்று; கண்டு களித்தற்குரியதே தவிர, மனக் கண்முன் நிறுத்தி விவரிப்பதற்கு இயலாததே.

இடைவழிக் காட்சி

இரதநூபுரத்திலிருந்து போதனமாநகர் புகும் வரை சுயம்பிரபைக்குக் களைப்புத் தோன்ருதவாறு, வழியில் காணப்படும் இயற்கைக் காட்சிகளைச் சுட்டிக்காட்டி விளக்கிச் சென்றனர். "நங்காய், இதோ அங்கு ஓடுகின்ற ஆறு கங்கை; நம் மலைக்கு மேலுயர்ந்த பொன்மலையினின்றும் இழிதருகிறது. அவ் யாற்றின் அடைகரைகளில் அழகிய கற்பகச்

சோலைகள் அடர்ந்துள்ளன. நாம் விண்ணில் செல்வதால் மண்ணில் அமைந்த அச் சோலைகள் நமக்கு வளர்ந்த பசும் புற்றரைகள் போன்று தோன்றுகின்றன. ஆண்டுள்ள மக்கட்கு அவை நம் வெள்ளிமலையை எள்ளும் தோற்றத்தன. கங்கையாம் நங்கை தன் அலைக்கரங்களால் அடித்து வரும் சந்தனக்கட்டைகளை அரைத்து நுரைக் குழம்புகளாய்க் கரையில் ஒதுக்குவதைக் காண வில்லையா நீ! அதோ பார்!

“ எவ்வளவு விரைவில் கங்கைச் சமவெளியைக் கடந்துவிட்டோம். இங்குக் காணப்படுவது சிந்து நதிப் பிரதேசம். இந்நதியும் பொன் மலையில் தோன்றி, நம் மலையிலுள்ள ஒரு பெரு முழை வழியே பொன்னையும் மணியையும் அடித்துவந்து வள்ளல்போல் வீசிக் கீழ்க் கடலில் சேர்கின்றது. இந்நதி தீரத்தில் வளப்பமுற்றுத் திகழ்வது சுரமை நாடு. நாட்டின் எல்லையில் புகுந்துவிட்டோம். அண்மையில் காணப்படுவதுதான் சுரமை நாட்டின் தலைநகர் போதனமாநகர். அங்குக் காட்சி யளிக்கும் சோலைதான் ‘திருநிலையகம்’ எனும் பெயரினை உடையது. அங்கேதான் நாம் இறங்க வேண்டும்” என்று தோழி கூறி முடிப்பதற்கும், விமானம் சோலையில் இறங்குவதற்கும் பொருத்த மாக இருந்தது. அரசனும் பரிவாரங்களுடன் இறங்கினான்.

கூடார அமைப்பு

அரசன், அச்சோலை தங்கட்கு ஏற்ற இடமெனக் கருதிக் கூடாரம் அமைக்கச் செய்தான். அரசற்குத்

தனியே கோயிலும், அதனைச் சுற்றி ஏனையோர்க்கு இருப்பிடமும் வகுத்தனர்; ஒருபுறம் அரசி வீற்றிருக்க அணிமணி மண்டபமும் ஆடரங்கும் அமைத்தனர்; அருகன் கோட்டமும் நிறுவினர்; சுயம்பிரபைக்குக் கன்னிமாடம் ஒன்றும் கவின் பெறச்செய்தனர். அவரவர் அவரவர்களுக்குரிய இருப்பிடம் அடைந்து இளைப்பாறினர்.

பயாபதி அறிதல்

சடியரசனின் தூதன் ஒருவன் புரவி இவர்ந்து பயாபதி அரண்மனை அடைந்தான்; தன் அரசன் சுற்றம் சூழத் தன் மகள் சுயம்பிரபையோடு திருநிலையகத்தில் தங்கியிருப்பதையும், திருமணம் விரைவில் நடத்த விரும்புவதையும் தெரிவித்து நின்றான். பயாபதி கேட்டு மகிழ்ந்தான்; உழையரை அழைத்து, நகரமாந்தர் அனைவரும் புத்தணி அணிந்து விழாக் கோலம் கொள்ளவும், நகர் முழுதும் அணிபெறச் செய்யவும், கச்சையானைப் பிடர்த்தலை இருந்து முரசறையச் செய்தான்; எங்கும் தோரணம் நாற்றவும், நிறைகுடம் அமைக்கவும், நறுமலர் மாலைகள் நாலவிடவும் ஏவலர்க்குப் பணித்தனன்; அருகன் ஆலயத்தில் விழா நடக்க ஏற்பாடு செய்தான்; பிற மன்னர்களுக்கு ஓலை அனுப்பினான்.

வரவேற்பு

பயாபதி தன் குமரர்கள் இருவருடனும் படைகள் சூழ யானைமீதமர்ந்து வரவேற்பளிக்கச் சென்றனன். செல்லும்போது தோற்கருவி, துளைக்கருவி,

நரம்புக்கருவி, கஞ்சக்கருவி யாவும் இயங்கின. நகரமாந்தர் வாழ்த்தொலி செய்து மலர்மழை பெய்தனர். தோரணங்களும் கொடிகளும் தெருக்களில் நிறைந்து இரவினைச் செய்தன. ஆனால், தெருக்களில் செல்வோர் அணிந்திருந்த கலன்கள் காரிருள் போக்கிக் கனக ஒளி பரப்பின.

பயாபதி இவ்வாறு இரவு பகல் அறிய முடியாத தெருக்களைக் கடந்து திருநிலையகம் புக்கனன். இவன் வருகை அறிந்த சடியரசன் சிறப்புடன் எதிர் கொண்டு அழைத்தனன். இருவர் பரிவாரங்களும் கங்கையும் யமுனையும் என ஒன்று கலந்தன. மண்ணக மன்னனும் விஞ்சையர் வேந்தனும் ஒருவரையொருவர் சந்தித்தபோது மகளிர் மங்கலம் பாடிப் பல்லாண்டிசைத்தனர். விசயனும் திவிட்டனும் சடியரசனைப் பணிந்தனர். விஞ்சையன் அவர்களை மார்புறத் தழுவி ஆசி கூறினன். சடியரசன் இளவலும், மருகனும், மைந்தனும் பயாபதியைப் பணிந்தனர். அவனும் அவர்களை அணைத்து ஆசி கூறினன். அரசர் இருவரும் தங்களுக்கு உறவு உண்டாக்கிய இயற்கை அன்னையின் வலியையும், தங்கள் முன்னோர் வழியில் தாங்கள் உறவினராயிருப்பதையும் எண்ணியெண்ணி உரையாடி வியந்தனர்.

நகர்வலங் காணல்

விஞ்சையர் இளவரசனாகிய அருக்ககீர்த்திக்கு நகர்வளங்காட்ட விசயனும் திவிட்டனும் புறப்பட்டனர். எல்லோரும் களிறேறி உலாவந்தனர். சுயம்பிரபைக்கு நகர்வளங்காட்ட, தோழியர் இளவரசியை

விமானத்தேற்றி அரண்மனையின் ஏழாம் நிலை மாடத்துக் கொண்டு சென்றனர். பிரபையின் உயிர்த்தோழி அமிர்தமாபிரபை மாடத்தின் சாளர வழியே தன் தோழிக்கு நகர்வளத்தைக் காட்டி நின்றாள். காட்டி வரும்போது தெருவில் உலாவந்த இளவரசர்களையும் கண்ணுற்றாள். அவர்கள் யாவர் என்பதைப் பிரபைக்கு விளக்கினாள். அவள் திவிட்டனைக் கண்டதும் அவன்மேல் சென்ற தன் கண்களை அவளால் மீட்க முடியவில்லை. காதல் கைமிக தன்னை மறைக்குந் திறனின்றி வருந்தினாள். அவள் நிலையறிந்தும் அதனை மாற்ற மருந்தறியாத தோழியர், அவளை மீண்டும் விமானத்தேற்றிச் சோலையிலுள்ள கன்னி மாடம் சேர்த்தனர்.

செவிலித்தாயர் பிரபையைக் காணல்

அரசியாகிய சசிதேவி, தன் தோழியர் பலரையும், திவிட்டனின் செவிலித் தாயரையும் பல்வகை வரிசைகளுடன் தன் மருமகளைக் கண்டு வர அனுப்பினாள். இம்மகளிர், பிடிகளிலும், தேர்களிலும், சிவிகைகளிலும் ஊர்ந்து சென்று சுயம்பிரபையின் கன்னிமாடம் அடைந்தனர். மகளிர் தாங்கள் கொண்டு சென்ற வரிசையை வழங்கி இளவரசியை வலம் வந்து வாழ்த்தினர். மதுகரி, வசந்தசேனை முதலியோர் வாழ்த்தும்போது, இளவரசி அவர்கள் திவிட்டனின் பணிப்பெண்கள் என்பதை அறிந்தாள்; தன்னையும் அறியாது புன்முறுவல் செய்தாள். உடனே நாணத்தால் நடுங்கி, முறுவலைப் பிறர் அறியாவண்ணம் நறுமலர் ஒன்றினை எடுத்து முகர்வது போன்று பாவனை செய்து மறைத்தனள்.

அந்நிலையில் இளவரசியின் அழகினைக் கண்ட அம் மகளிர் யாவரும் போற்றிப் புகழ்ந்தனர். பின்னர், அவர்கள் யாவரும் பிரபையை நோக்கி, "நங்கையர் திலகமே, உங்கள் மாமியார் எம் கண்களைத் தம் கண்களாக்கி உங்களைக் கண்டுவர ஏவினர்.

'......கண்கள்என் கண்க ளாகப்
பெண்களை மருட்டும் சாயல்
பேதையைக் காண்மின் என்று
மண்களை மருட்டும் சீரும்
மாமியார் அடிகள் சொன்னார்.'

"அவர்களுக்கு யாம் மீண்டு சென்று சொல்லும் செய்தி ஒன்று சொல்லியருள்க" என்றனர். பிரபை நாணத்தால் முகஞ் சிவந்து மூங்கையாயினள். மாதவசேனை, "பிரபா, எங்கள்முன் நீங்கள் பேசுவதால் ஏதம் ஒன்றும் ஏற்படாது. அஞ்சற்க!" என்றாள். கேட்ட பிரபை முறுவலுடன் தன் உயிர்த் தோழியை நோக்கினள். அவள் குறிப்புணர்ந்த அமுதமாபிரபை, வந்திருந்த பெண்களில் குறிப்பாகச் செவிலித்தாயர்களை நோக்கி, "அன்னைமீர், நீங்கள் உங்கள் உருவினை எங்கள் உருவெனக் கொண்டு எம் மாமியார் பாதங்களைப் பணிவீர்களாக!" என்றாள்.

'அங்குஅவள் குறிப்பு நோக்கி
அமுதமா பிரபை என்னும்
மங்கலத் தோழி கூறும்:
'மாமியார் அடிகள் தம்மை
எங்கள்மெய்ச் செய்கை யாக
இணையடி பணிமின்' என்றாள்
செங்கனி கனிந்தசெவ்வாய்ச்
சிறுநுதல் பெரிய கண்ணாள்.'

ஓவியம்

உரைகேட்டு விடைபெற்று மீண்ட தோழி யரும், செவிலித்தாயரும், அமிர்தபிரபை கூறி யதை எண்ணியவாறு சசிதேவியை வீழ்ந்து வணங் கினர்; 'உங்கள் மருமகள் தாம் வணங்குவதாக எங் களை வணங்கச் சொன்னார்' என்றனர். அது கேட்ட அரசி அகமகிழ்ந்து மருகியைப் பாராட்டினாள். தோழி மாதவசேனை தன் கைத்திறனால் தீட்டிவந்த சுயம்பிரபையின் உருவப்படத்தினைக் காட்டினாள். உருவம் சசியின் உள்ளத்தைக் கவர்ந்தது. மருகி யின் அழகைப் புகழ்ந்ததோடு, தோழியின் கைத் திறனைப் போற்றிப் பரிசுகள் வழங்கினாள்; அவ் வோவியத்தைத் திவிட்டனுக்குக் காட்டும்படி ஏவினாள்.

ஓவியம் உள்ளத்தைத் தொடுதல்

திவிட்டன் பாவையின் ஓவியம் கண்டு விம் மிதம் எய்தினான்; இவ்வுரு விண்ணவர் மடந் தையோ, மண்ணவர் மங்கையோ, விஞ்சையர் விமலையோ அன்றிக் கொல்லிப் பாவையோ என்று வியந்தான்.

வியப்பைக்கண்ட தோழி விளக்கங்கூற முனைந் தாள். 'ஐயனே, சற்று அமைதியாக நோக்குங்கள் : தாங்கள் எளிதிலே அறிய முடிகிற பாவைதான் இவள் !' என்றும் தேவசேனை எடுத்துரைத்தாள். திவிட்டன் சட்டென்று உணர்ந்தவனாய், 'விஞ்சை யர் மகளோ இவள்? என் நெஞ்சை அள்ளும் அழகினைப் பெற்றிருக்கின்றாளே!' என்று கூறிக்

கொண்டே படத்தை வாங்கி வைத்துக்கொண்டு தோழிக்குப் பரிசளித்து அனுப்பிவிட்டான்.

பாவையின் ஓவியம் நம்பியின் உள்ளத்தைப் பாகாய் உருக்கிற்று. காதல் வயத்தனுய்க் கையிகந் தான். திவிட்டனின் காதல் நோயைக் கதிக்கச் செய்பவன் போன்று செங்கதிரோன் உடலம் சிவந்து மறைந்தான்.

திருமணம்

விஞ்சையர் எவரும் துஞ்சினர் அல்லர்; இரவினை ஆடல் பாடலில் கழித்து அகம் மகிழ்ந் தனர். பொழுதும் புலர்ந்தது. புரவலனும் (பயாபதி) துயிலுணர்ந்து தூயோனைத் தொழுதெழுந்தான்; கடன் முடித்து நாயகன் கோயில் புக்கான்; அங்குச் சிறப்பெடுத்தற் குரிய ஏற்பாட்டினைச் செய்தான். அறிவிப்புடன் நகர மாந்தரும் பிறரும் வந்து குழுமி னர். அரசன் எல்லோருடனும் பூசனை முடித்துக் கொண்டு திருமண மண்டபம் அடைந்தான். மண மக்களும் புனுகு நீராடிப் புத்தாடை பூண்டு நின்ற னர். மண்ணவரும் விண்ணவரும் விஞ்சையரும் வாழ்த்துக் கூற, திருமணம் நடந்தது. காதலர்கள் கணவனும் மனைவியும் ஆயினர்; கற்புக்கடன் பூண்டனர்.

8. போர்

ஒற்றர் உணர்த்தல்

திருமணம் இனிது நிறைவேறியது குறித்து யாவரும் மகிழ்ந்து இன்பத்தில் ஆழ்ந்தனர். இன்பத்தில் ஒரு துன்பம் திடீரென்று குறுக்கிட்டது. விஞ்சையர் தூதன் ஓடிவந்தான்; விரைந்து சடியரசனைக் கண்டு, மிகப் பணிவோடு வணங்கி, அச்சத்தோடு உடல் நடுங்க நின்றான். சடியரசன் பதட்டமின்றிச் செய்தியைக் கூறும்படிப் பணித்தான். "உத்தரசேடியினை ஓம்பும் அச்சுவகண்டன் போர்முரசு கொட்டுகின்றான். அவனைச் சார்ந்தவர் யாவரும் ஒன்று திரண்டுள்ளனர். ஊழிக்காலத்தில் உலகையழிக்கும் கடல் போல் சேனைகள் கொதித்து நிற்கின்றன" என்று தூதன் கூறினான்.

சடியரசன் இச்செய்தி கேட்டுத் திடுக்கிடவில்லை. "யாம் எதிர்பார்த்ததுதான். அவர்கள் போர்க்கோலம் கொண்டுவரினும் வருக; இன்றிப் போயினும் போக! அரிவாய் பிளந்த அரியேறனைய திவிட்டன் இருக்கும்போது யாம் எதற்கும் அஞ்ச வேண்டுவதின்று. இருப்பினும், அச்சுவகண்டன் போர்க்கோலம் கொள்ளுதற்குரிய காரணங்கள் யாவற்றையும் இங்குள்ளோர் யாவரும் அறியத் தெளிவு படுத்துதல் மிக அவசியமாகும்" என்றான்.

அச்சுவகண்டனின் ஆருச் சினம்

"சடிவேந்த, நம்பி திவிட்டன் கோளரியைக் கொன்ற செய்தியை மாயச்சீயமாய் வந்த அரிகேது வால் உணர்ந்த விஞ்சையர் வியப்பும் திகைப்பும் கொண்டனர். அமைச்சன் இச்செய்தியையும், திறைப்பொருள் திரும்பாத திறத்தையும் அச்சுவ கண்டன் அறியாவண்ணம் சில நாட்கள் மறைத்து வைத்திருந்தான். நீண்டநாள் அவ்வாறு மறைத் தால் தனக்கே ஆபத்து வரக்கூடுமென அஞ்சி அரிகேதுவை அனுப்பி அச்சுவகண்டனுக்கு அறி விக்கச் செய்தான்.

"அச்சுவகண்டன் கொலுவீற்றிருக்கும் அமயம் அறிந்து, அரிகேது அரசவை சென்ருன். அரசன் காலில் மும்முறை வீழ்ந்து, வணங்கி, வாய்புதைத்து நின்ருன். அச்சுவகண்டன் அரிகேதுவை நிமிர்ந்து பார்த்தான். 'செய்தி யாது? கூறுக!' என்றிருந்தது பார்வை.

"உடல் நடுங்கிக்கொண்டே, அச்சுவகண்டன் ஆணையால் தூதர்கள் போதனமாநகர் சென்றதும், திறை கேட்டதும், தடையின்றித் திறை பெற்றதும், அதனை அறிந்த அமைச்சர்கள் தன்னை மாயச்சீய மாய்ச் சென்று சுரமை நாட்டை அழிக்க ஏவியதும், தான் அவ்வாறு அழித்ததும், விசய திவிட்டர்கள் தன்னை வேட்டையாடத் தொடர்ந்ததும், திவிட் டன் தன்னைக் கண்டு உரப்பியதும், உரப்பலை அஞ்சி ஓட்டமெடுத்து உண்மைக் கோளரி உறையும் குகையில் தான் பதுங்கியதும், அப்பொழுது திவிட் டன் செய்த ஆரவாரத்தால் உண்மையான சிங்கம்

வெகுண்டு வெளிக்கிளம்பி அவன்மேல் பாய்ந்ததும், பாய்ந்த சிங்கத்தைப் பற்றிப் பிடித்துப் பிளந்தெறிந்ததும் ஆகிய நிகழ்ச்சிகளை ஒன்று விடாமல் கூறினுன்.

"யாவும் கேட்ட அச்சுவகண்டனுக்கு அடங்காக் கோபம் மூண்டது. கண்ணில் தீப்பொறி பறக்கச் சுற்றிப் பார்த்தான்; பக்கத்திலிருந்த வயிரத் தூண் ஒன்றை உதைத்துச் சுக்குநூருக்கினுன். பக்கத்திலிருந்த யாவரும் 'யாது நேருமோ' என்று நடுநடுங்கிக்கொண் டிருந்தனர். அச்சுவகண்டன் செய்யும் வீண் ஆரவாரத்தைக் கண்ட அரிகேது, தன்னுள்ளே நகைத்து, 'திவிட்டனின் வலிமையை நேரில் கண்டாலன்றி இவன் உணரமாட்டான். இவனிடம் திவிட்டனைப்பற்றிச் சொல்வதில் பயனில்லை' என்று எண்ணிக்கொண்டு, பயப்படுபவன் போல் பாசாங்கு செய்தான்; தலையில் கூப்பிய கையனுய் வளைந்து நின்முன்.

எரியும் நெருப்பில் எண்ணெய்

"இந்நிலையில் ஒற்றன் ஒருவன் ஓடிவந்து, திவிட்டனுக்கும் சுயம்பிரபைக்கும் மணம் நடந்த செய்தியைத் தெரிவித்தான். தெரிவித்ததுதான் தாமதம், அச்சுவகண்டன் கோபம் பன்மடங்காகப் பொங்கிற்று. 'சடியரசன், திவிட்டன் இவர்களின் வலிமையை இன்னே அளவிடுகின்றேன்' என்று உரப்பினுன். அவன் ஆணைப்படி நாற்படைகளும் திரண்டு நின்று அணிவகுத்தன. அவனை வணங்கி நின்ற சேனைத்தலைவர்கள் அவனின் அடங்காக் கோபத்

தையும், அவன் விழிகள் வெங்கனல் வீசுவதையும், வயிரத்தூண் ஒன்று நொறுங்கிக் கிடப்பதையும் கண்டு துணுக்குற்றனர். 'இவ்வளவு கோபம் இதற்கு முன் வந்ததில்லையே; இப்பொழுது வருதற்குக் காரணம் யாது? இக்கோபத்திற்கு யாவர் ஆளாகின்றனரோ !' என்று அஞ்சினர்.

போர் முழக்கம்

"அச்சுவகண்டன் அவர்களை நோக்கி, 'சடியரசன் எனக்குத் தெரியாமல் தன் மடமகளை ஒரு மானுடனுக்கு மணம் செய்தானும். அம்மானுடன் நமக்குத் திறை கொடாது மறுத்தவன் ஆவன். இவர்களை இன்னே அழிக்கவேண்டும். இன்றேல், நம் ஆட்சியின் புகழ் மங்கிவிடும். எழவேண்டும் போருக்கு' என்று முழக்கமிட்டான்.

"'மன்னர் மன்ன, இவ்வற்பப் பூச்சிகட்கோ வெகுள்வது; அஞ்சுவது' என்று சேனைவீரர்கள் கூறியதைக் கேட்டதும், 'எழுவினும் திண்ணிய நமது புயங்களால் யாது பயன்? நாம் இப்பொழுது சென்று பகைவரைப் பதைத்திட வதைப்போம். இன்றேல், வீரசுவர்க்கம் புகுவோம். அரசன் ஆதரவால் இத்துணை நாளும் உண்டு உரமேறிய யாங்கள் அவன் பொருட்டு எங்கள் உடல் வலியைச் செலவிட்டு உயிர் விடுவோம். அதுவே யாங்கள் வீரசுவர்க்கம் செல்வதற்கேற்ற வழியாகும். நம் அரசனுக்குத் தீங்கிழைத்தோர் இதுவரை பிழைத்திருப்பதால் எமக்கே எம்மிடம் வெறுப்பும் பழிப்பும் ஏற்படுகின்றன. இனி, நாம் பற்பல விதமாய் வீரவாதம் பேசி

வீண் ஆரவாரம் செய்வதால் பயனில்லை. உடனே சென்று அம்மானுடர்களையும், அவர்களை மதித்துச் சென்ற இந்த விஞ்சையர் நஞ்சர்களையும் சிறைப் படுத்துவோம்' என்று வீரர்கள் விண்ணதிர, மண் ணதிர, விஞ்சையர் உலகு அஞ்சி நடுங்க எஞ்சலில் முழக்கமிட்டனர்.

கனகசித்திரன்

"இவ்வீர உரைகளைக் கேட்டு நின்ற அச்சுவகண் டன் மகன் கனகசித்திரன், சேனை வெள்ளத்தைக் கையமர்த்தி, ஒலியடக்கி அரசனை நோக்கினான். 'அண்ணலே, நம்முடைய போர் வீரர்கள் தோள் புடைத்துத் துணைக் கரம் கொட்டி ஆரவாரிக்கின் றனர். சொல்வது யார்க்கும் எளிது. சொல்லிய வண்ணம் செய்தல் அரிதினும் அரிது. இவர்கள் அவர்களை வெல்வது, இவர்கள் சொல்வது போன்று அவ்வளவு எளிதன்று. தானவரும், வானவரும், மானவரும் ஒருங்கு சேர்ந்து பொரவரினும் அவர்களை வென்று புறங்காணுதல் என்னால் முடியும். மற் போரினும், மாயப் போரினும் என்னை வெல்லும் ஆற்றலுடையார் எவருமிலர் என்பது தாங்கள் அறியாததோ? அதிகப் பேச்சினால் பயனில்லை. யான் இப்பொழுது சென்று திவிட்டனையும் சுயம்பிரபை யையும் சிறை கொணர்வேன். விலங்கரசன் எதிரில் குள்ள நரி வீரம் பேசி ஆர்ப்பரிப்பதைப் போல, இவர் கள் பேசுதலைக் கேட்க எனக்கு என்னையறியாமல் நகைப்புண்டாகிறது. முன் என்னை அனுப்பிப் பின் என் வீரத்தைக் கண்டு மகிழ்வீர்களாக' என்று படபடக்கச் சொற்களை அள்ளி வீசினான்.

வச்சிரகண்டன்

"கனகசித்திரன் கர்ச்சனையைக் கேட்ட அச்சுவ கண்டன், கோதிலா மாரி பெய்த கோடையங் குன்றம் போலச் சிறிது உள்ளங் குளிர்ந்து கோபம் மாறினன். கோபத்தை இன்னும் மாற்றக் கருதிய கனகசித்திரன் இளவல் வச்சிரகண்டன் தன் தந்தையைப் பார்த்துச் சில வார்த்தைகள் கூறினன்:

"'தந்தையே, எங்கள் ஆண்மை இருக்கத் தாங்கள் தளர்வதேன்? எங்களைவிட வலிமை மிகுந்த பகைவர்கள் உண்டாயினர்களோ? யாங்கள் இருக்கத் தாங்கள் அளவற்ற ஆத்திரத்திற்கு ஆளாகலாமோ? அப்பகைவர்களை அடக்கப் போர்க் கோலம் கொண்டு தாங்கள் புறப்படுவதும் தங்கள் தகுதிக்குத் தக்கதாகாது. கருங் கடலில் ஓடத் தகும் மரக்கலம் சிறிய உப்பங் கழியில் செல்லுமோ? தாங்கள் மேற்சென்று அழிக்க நினைக்கும் பகைவர் தானவரும் அல்லர்; வானவரும் அல்லர். ஆதலால், தாங்கள் போர்க்கோலம் கொள்ளல் தகுதியன்று. எங்களை ஏவி வென்றி கொள்ளும்படி வேண்டு கின்றேன்' என்று முழக்கமிட்டான்.

மந்திராலோசனை

"ஏனைய தம்பிமார்களும் அரசிளங்குமரர்களும் தத்தம் பெருமையைப் பலபடப் பேசினர்கள். அச்சுவகண்டன் ஆருச் சினமும் ஆறிற்று. ஆலோ சனைக்கு இடம் ஏற்பட்டது. மந்திரக் கிழவர்களும், தந்திரத் தலைவர்களும் ஒன்று கூடினர். அச்சுவ கண்டனும் வந்து சேர்ந்தான். சபையிலுள்ள

யாவரும் எழுந்து நின்று மரியாதை செய்து அமர்ந்தனர்.

"அரிமஞ்சு சபையிலுள்ளோரைப் பார்த்து, 'சடியரசன் செய்கை மன்னர் ஏறை மாருச் சினத்திற்கு ஆளாக்கியதைச் சிறிது நேரத்திற்கு முன் கண்டீர்கள். ஆதலால், இனிமேல் செய்ய வேண்டுவதைச் சேனைத் தலைவர்களே ஆராய்ந்து சொல்லுதல் ஏற்றதாகும்' என்றான்.

"உடனே தூமகேது எழுந்து, 'அரசர்க்குரியது அருங்கலம்; நம் பெண்கள் திலகமாகிய சுயம்பிரபையை நம் மன்னர் மன்னன் தேவியாதலே தகுதி. ஒரு மானுடனுக்கு மனைவியாவது, அதுவும் சடியரசன் வலிந்து கொடுத்தது மிக்க அவமானத்திற்குரிய செயலாகும்' என்றான்.

"அங்காரவேகன் எழுந்து, 'இரதநூபுர மன்னன் நம்மைப் பெரிதும் இகழ்ந்துள்ளான்; அவனைக் கிளைகளோடும் கொன்று குவிக்க யாம் எல்லோரும் போர்க்கோலம் கொள்ளவேண்டும். தாமதித்தல் தகாது' என்று படபடத்தான்.

"அச்சுவகண்டன் உயிர்த் தோழன் அரிசேனன், 'நாம் யாருமில்லா இடத்தில் அசுவமேத யாகம் செய்வதுபோல், வீண் பேச்சுப் பேசுவதால் யாது பயன்? பகைவரைத் தொலைக்கவேண்டுமானால் என்னை அனுப்புங்கள். யான் போய் வெற்றியோடு மீள்கின்றேன். அரசர்க்குரிய சாமம், தானம் முதலிய தந்திரங்கள் யாவும் உயிருக்கு அஞ்சுபவர்கள் செய்யக் கூடியதாகும். ஆலோசனையை விட்டு

நாற்படையுடன் சென்று பொருதலே போற்றத் தகுந்தது ' என்று முழக்கம் செய்தான்.

“அச்சுவகண்டனுக்கு இக்கடைசி முடிவே அக மகிழ்வைத் தந்தது. 'அரிசேனனே ஆலோசனைக் கேற்றவன்' என்று ஆதரித்தான்.

“போர் முழக்கத்திற்கு ஆதரவு இருப்பதை அறிந்த கருடத்துவசன், 'மானுடர்களும், விஞ்சை யர்களும் ஒன்று கலந்த பகைவர்களாய் இருப்பதால் அவர்களிடம் செய்யும் போர் மானுடப் போரா? தெய்வப் போரா?' என்ற வினவை எழுப்பினன்.

போர் முறை

“சிரீபாலன் இவ்வினவிற்குத் தெளிவான விடை பகர்ந்தான். 'போரில் பயன்படுத்தும் படைகள் மானுடப் படை, தெய்வப் படை, சங்கீரணப் படை என மூவகைப்படும். படைக் கலங்களைப் பயன் படுத்தும் முறையிலும் அஸ்திர வித்தை, சாஸ்திர வித்தை, மாய வித்தை என மூன்றுண்டு. அவற் றுள் அஸ்திரம் கைவிடும்படை, அம்பு, சக்கரம், எறி வேல் முதலியன. இவ்வாறு பலவகையானும் விரிந்து செல்லும்.

“'இவற்றுள் முதலில் கூறிய மூவகைப் படைக ளுள்ளும் மக்களுடன் போர் புரிவதற்கு மனிதப் படையே தக்கதெனினும், போர்க்களத்தில் விஞ்சை யரும் நம்மை எதிர்ப்பாராதலால் தெய்வப் படையும் மாயப் படையும் பயன்படுத்துவது ஏற்றதாகும். ஆதலால், மூவகைப் படையும் கொண்டு போர்

செய்யத் தயாராக இருக்கவேண்டும்' என்று கட்டுரைத்தான்.

"முடிவாக அச்சுவகண்டன் ஆமோதிப்போடு ஆலோசனைக் கூட்டம் கலைந்தது. அதன் பின் விஞ்சையருள் சிலர் நம் தக்கணசேடியை எரி கொளுவக் கருதிச் சென்றனர். ஏனையோர் போதன மாநகருக்குப் போருக்கு வரப் புறப்படுகின்றனர். இவற்றை எல்லாம் அறிந்த யான் ஓடோடியும் வந்து தங்களைக் கண்டு நடந்தன யாவையும் கூறுதல் எனது பெருங்கடமை என உணர்ந்து வந்தேன்" என்று தூதன் கூறி முடித்தான்.

சடியரசன் ஆலோசனை

இவ்வளவும் கேட்ட சுவலனசடி அச்சுவகண்டன்போல் ஆத்திரப்படவில்லை. தன் மகன், மருகன் முதலிய யாவரையும் கூட்டி ஆலோசிக்கலானான். ஆத்திரப்பட்ட வீரர்கள் அள்ளி இறைத்தனர் வார்த்தைகளை. ஆனால், அவைகளை யாரும் ஏற்றுக் கொள்ளவில்லை.

அருக்ககீர்த்தி

"தந்தையே, யான் எனது கைவில்லை வளைத்து அம்பினைச் சொரிந்தால் பகைவர்கள் உடலம் துண்டங்களாகும். இரத்த வெள்ளம் எண்திசையும் புரண்டோடும். போர்க்களத்தில் என் ஆற்றலைப் பார்க்கலாம். இப்பொழுது வீண் பேச்சினால் ஆவதென்ன?" என்றான் அருக்ககீர்த்தி.

விசயன்

"நம்மோடு போர் செய்யத் தேவர்கள் வருவதாயின் நாம் ஆலோசித்துப் போர் செய்ய வேண்டும். விஞ்சையர்களுக்கு நாம் அஞ்சவேண்டுவதில்லை. விஞ்சையரோடு வேறு எவர் உடன் சேர்ந்து எதிர்த்தாலும், அவர்கள் மார்பாகிய வயல்களில் எனது படையாகிய கலப்பையால் இரத்தச் சேற்றினைக் குழப்பி வெற்றி விதை விதைத்துப் புகழாகிய பயிரினை விளைப்பேன்" என்றான் விசயன்.

திவிட்டன்

"பெரியோர்களே! இப்பொழுது ஒவ்வொருவரும் வீரம் பேசவேண்டிய அவசியம் இல்லை. வருகின்ற அச்சுவகண்டன் சேனைகள் என் கையம்பிற்கே காண மாட்டா. எனக்கு அடங்காத சேனை வந்தால் அல்லவா, நாம் யோசிக்க வேண்டும்! பகைவர்கள் எப்போது வந்தாலும் வரட்டும். நான் பார்த்துக் கொள்கின்றேன். நீங்கள் எவ்விதமான மனக் கவலையும் இல்லாமல் இருந்தால் போதும்" என்று கூறினான் திவிட்டன்.

மந்திர உபதேசம்

இவ் வீரவுரையைக் கேட்ட சுவலனசடியின் மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை. இருந்தாலும் விஞ்சையர் மட்டும் அறிந்துள்ள சில போர்ப் பயிற்சியைத் திவிட்டனுக்கும் அளிக்கக் கருதினான். திவிட்டனைத் தனியே அழைத்து, அவன் வலக் காதில் மாய வித்தைப் பயிற்சியும், மந்திர உபதேசமும் செய்தான். திவிட்டன் அம் மந்திரத்தைத் தனது நெஞ்

சத்திலே பதித்து உச்சரித்தான். உச்சரித்த அள விலே மாய தேவதை வான் வழி வந்து திவிட்டனுக் குக் கட்புலனாகவும், அங்குள்ள மற்றையோர்க்குச் செவிப்புலனாகவும் தோன்றி, அவனை வணங்கி நின்றது; அவன் ஏவல் செய்யக் காத்திருந்தது. அவன் அத்தேவதைக்கு வந்தனை வழிபாடாற்றி, "உன்னை யான் நினைக்கும்போது என்னிடம் வந்து எனக்கு உதவி புரிக" என்று கூறி அத்தேவதையை அனுப்பினான்.

அச்சுவகண்டன் தூதர்கள்

ஆதலால், போதனமாநகர் திவிட்டனின் திற மையை எண்ணி அமைதியோடு இன்பத்தில் ஆழ்ந் திருந்தது. அந்நகரின் அமைதி கலந்த இன்பத்தில் திடீரென்று ஒரு குழப்பம். அச்சுவகண்டன் தூதர் இருவர் ஆகாயவழியே வந்து, திவிட்டன் பயாபதி சுவலனசடி முதலியோர் கூடியிருக்கும் அவையை அடைந்தனர். அவையில் உள்ளோரை நோக்கி,

" 'பொன்னவிர் திகிரி யானும்
புரவலர் உரைப்ப வந்த
மன்னவன் தமரம் யாமே;
வாய்மொழி கேண்மின் மன்னீர்!
கன்னியைத் தருதி ரோ? அக்
கன்னியை மகிழ்ந்த காளை
இன்னுயிர்த் தருதி ரோ? இவ்
விரண்டில்ஒன்று உரைமின் என்றார்'

"மன்னர்களே, யாங்கள் உத்தரசேடி மன்னர் மன்னன் அச்சுவகண்டன் ஆணையின்படி இங்குப்

போந்த தூதர்கள். நீங்கள் சுவலனசடியரசன் நங்கை சுயம்பிரபையை எங்கள் அரசனுக்குத் தர வேண்டும். அல்லது அந்நங்கையை மணந்த நம்பி திவிட்டனின் இன்னுயிரை இன்னே தரவேண்டும். இது எங்கள் மன்னர் ஆணை. இவ்விரண்டில் எதைச் செய்யத் தயாராக இருக்கின்றீர்கள்? உடனே உரைக்க வேண்டும்'' என்றனர்.

திவிட்டனின் திரு உரு

இதைக் கேட்டுக்கொண்டிருந்த திவிட்டன் எப்படி இருந்திருப்பான் என்பதை எண்ணிப் பார்க்க முடியுமேதவிர, சொல்லிக் கேட்க முடியாது. சீற்றங் கொண்டு தன் மாய வல்லபத்தால் ஒரு பேருரு எடுத்தான். அவ்வுருவத்தைக் கண்டு துஞ்சும் நிலைபெற்றனர் தூதர்கள். பயபக்தி கொண்டனர் அங்குள்ள பார்த்திபர். விண் வழி நோக்கிய தேவர்கள் மகிழ்ச்சிப் பெருக்கில் மலர் மழை சிந்தினர்.

பேருருக் கொண்ட திவிட்டன், தூதர்களை நோக்கி, "துன்மொழி மொழிந்த தூதர்களே, நீங்கள் தூதர்கள் ஆனதால் உயிர் தப்பினீர்கள். இன்றேல், உடல்தான் தப்பியிருக்கும். நாயும் நரியும் பேயும் உள்ளன. ஆதலின், நீங்கள் இனி இங்கு அரைக் கணமும் அமரலாகாது; ஓடவேண்டும். அறிவறை போகிய அச்சுவகண்டனிடம், என்னிடம் போருக்கு வரும்படிச் சொல்ல வேண்டும். ஓடுங்கள் பிழைத் தோம் என'' என்று வெருட்டினான்.

மற்றையோர் கூற்று

தூதுவர்கள் ஓடுவதைக் கண்ட பிற மன்னர்கள், 'அச்சுவகண்டன் ஆயுள் அழிந்து விட்டது. ஆதலால், இவ்விதத் தூது விட்டுளான். பேதை பெரிதும் பிழைத்துளான். இனி, அவன் பிழையான். அவன் ஆணைச் சக்கரத்தையும், அரும்பெரும் செல்வத்தையும் நாம் பிடுங்கித் திவிட்டனுக்கு அளிக்கும் போதுதான் நம் வல்லபத்தையும் அறிவான்; அதற்குமுன் அறிதற்கு அறியான். சுயம்பிரபை திவிட்டனைத் திருமணம் செய்துகொண்ட செய்தியை முன்னரே அறிந்திருந்தும், அக் 'குதிரைக் கழுத்தன்' மலையிலிருந்தே வீரம் பேசுகின்றான். அவன் பேச்சு திங்களை நோக்கி நாய் குரைப்பது போன்று இருக்கிறது, என்று சொல்லினர். பிறகு, தூதர்களைப் பார்த்து' "தூதர்களே! உங்களை இங்கு வரவிடுத்த அவன் வல்லபந்தான் என்னே! கேடு வருமுன் மதிகெட்டிருக்கிறது, உங்கள் குதிரைக் கழுத்தனுக்கு. உங்கள் அரசன்,

> ' துன்னிவந்து இவனடி தொழுவ னேல்உயிர்
> தன்னதாம்; அன்றெனில் தனதன்று; ஆதலால்
> மன்னுயிர் உவக்குமோ? மானம் வேண்டுமோ?
> என்னவன் உவப்பதுஎன்று எண்ணி வம்மினே.'

"எங்கள் பயாபதியின் இளைய நம்பி திவிட்டனிடம் மன்னிப்புக் கேட்டு அவன் அடி தொழுதால் உயிர் பிழைப்பான். ஆதலால், உயிர் வேண்டுமாயின் ஓடிவந்து பணிய வேண்டும். மானம் வேண்டுமாயின் மலைய வேண்டும். என் அவன் வேண்டுவது என்பதனை அறிந்து வாருங்கள்"

என்று ஆரவாரித்தனர். இவ்வுரைகளைக் கொண்டு ஓடினர் தூதர்கள்.

நன்னிமித்தங்கள்

ஆகாயவாணி, 'நாளை இத்திவிட்டன் அச்சுவ கண்டனை வென்று வாகை சூடுவான்' என்று யாவரும் அறிய உரைத்தது. யாவரும் கேட்டு இன்புற்றனர். ஆடவர்க்கு வலக்கண்ணும் வலத் தோளும் துடிப்ப, மடவார்க்கு இடக்கண்ணும் இடத்தோளும் துடித்தன. போர்க் கருவிகள் தாமே பொலிவு பெற்றன. திவிட்டனும் தன் போருருக் கரந்து தன் திருவுருப் பெற்றான்.

தீநிமித்தங்கள்

உத்தரசேடியில் தீநிமித்தங்கள் தோன்றின. முரசம் முதலிய பறைகளில் படநாகம் குடிகொண்டன. கொற்றக் குடையில் தேன்கூடு கட்டின. தேர்ச் சிகரங்களில் அண்டங் காக்கைகள் அடைந்து கூடு கட்டின. நகரமெங்கும் உதிரமழை உதிர்ந்தது. தெருக்களில் கவந்தமாடின. மாதர்கள் தம் மாண்பு திரிந்து மதிமயங்கி நின்றனர். அவர்கள் தம் காதணியும் கழுத்தணி மங்கலநாணும் தாமே கழன்றன. போர்க் கருவிகள் துருப்பிடித்தன. ஆடவர் இடக்கண்ணும் இடத்தோளும் துடிப்ப, பெண்டிர் வலக்கண்ணும் வலத்தோளும் துடித்தன. சேனைகள் நடுவண் விண்மீன்கள் விழுந்தன. வீரர்கள் கையிலிருந்த வில், வாள், வேல் முதலிய படைகள் தாமே நழுவி விழுந்தன. ஆனால், இந்நிமித்தங்களைப் பொருட்படுத்த வில்லை, தக்கணசேடியில்

உள்ள விஞ்சைய வீரர்கள். போர்க்கோலங் கொண்டு விளங்கினர்கள்.

போர்க்கோலம்

போதனம் சென்று மீண்ட தூதர்கள் உரை கேட்ட அச்சுவகண்டன் அஞ்சன நஞ்சம் கக்கினன்; வீரர்களை நோக்கி, போதனம் சென்று, புரவலர் யாவரையும் கொன்றுவரப் பணித்தான்; திவிட்டனையும் சுயம்பிரபையையும் தானே நேரில் தண்டிக்கக் கருதி அவர்களைச் சிறைப்பிடித்துக் கொண்டு வரும்படி கட்டளையிட்டான். கடல் போல் கிளர்ந்து எழுந்த சேனைகள் புறப்பட்டன போதன மாநகர் நோக்கி. முரசங்கள் அதிர்ந்தன; சங்கங்கள் முழங்கின; பறைகள் கறங்கின; வீரகண்டாமணிகள் ஒலித்தன; குடை, கொடி, சாமம், எங்கும் நிறைந்தன. வான்வழிப் புறப்பட்ட படைகள் திருமணம் மாருப் போதனமாநகர்ப் புறத்தே பாசறை யமைத்துத் தங்கின. மற்ருெரு படை இரதநூபுரத்தைத் தாக்கச் சென்றது.

போரில் அருக்ககீர்த்தி

இருவர் சேனையும் கலந்தன போரில். தேர் வீரரோடு தேர் வீரரும், களிருெடு களிறும், மாவொடு மாவும் மலைந்தன. தோற்றத்தால் மலையொடு மலையும், முகிலொடு முகிலும், கடலொடு கடலும் உருத்தெழுந்து உடற்றுவனபோல் இருந்தன. அருக்ககீர்த்தி படைமுகத்திற் சென்று தான் ஏறிய தேரினைக் குயவன் திகிரிபோல் திரித்துக் கோடிக் கணக்கான அம்புகளைச் சொரிந்தான். மாற்ருர்

படைக்கலங்கள் சுக்குநூருயின. மாற்றலர் மடிந் தனர். படைகள் பின்வாங்கி ஓடின.

அச்சுவகண்டன் வீடு

முதற்போரிலேயே தன்படை அழிந்தமை அறிந்த அச்சுவகண்டன் ஆருத் துயருற்ருன். இத் துயரத்தின்மேல் துயரம் ஏற்பட்டது இரதநூபுரத் தோல்வியால். தோல்விமேல் தோல்வி அவனுல் பொறுக்க முடியாத பாரமாயிற்று. தன் தம்பியரும் தனயரும் உடன்வரப் பெரும்படையொடு சென்று அருங்கலம் என்னும் மலையில் பாசறை அமைத்துத் தங்கினுன். பாசறையில் தம்பியர் ஒவ்வொருவரும் வீரம் பேசித் தரியலரைத் தறிப்பதாக உறுதி செய் தனர். தம்பியர்களின் தருக்குமொழிகளாகிய பெயல் அச்சுவகண்டன் வெதும்பிய உள்ளத்தைக் குளிரச் செய்தது. உள்ளங் குளிர்ந்து தன் தம்பிமார்களைப் பார்த்து, "நம் பகைவர்களை அழித்து மண்மிசை உங் கள் வீரப்புகழை நாட்டுங்கள்"

"தம்பியர் மொழியெனும் தயங்கு மாரியால்
வெம்பிய கொடுமனம் குளிர்ந்து, வெய்யவன்,
'நம்பெயர் முனிந்தவர் நயத்த மண்மிசை
நும்பெயர் நிறுத்துமின்......'"

என்று புகழ்ந்துரைத்தான்.

அரிசேனன் வியாக்கிரரதன் போர்

அச்சுவகண்டன் தோழனுகிய அரிசேனன் தன் படைகளோடு முதலில் போருக்குப் புறப்பட் டான். அவன் வரத்தில் பெற்ற ஒரு வாளும், கேட யமுமே அவன் பெரும்படைகள். அவ்வாளின்

பலத்தால் வலிய பகைவரை எளிதில் வெல்லும் நம்பிக்கையோடு போர் புரிந்தான்.

அரிசேனனை எதிர்க்கவும் அருக்ககீர்த்தியே விரைந்தான். ஆனால், அவன் சேனைத் தலைவன் வியாக்கிரரதன், அருக்ககீர்த்தியைத் தடுத்து நிறுத்தினான்; அவன் எதிர்க்கும் அளவுக்கு அரிசேனன் பெரும்வீரன் அன்றெனக் கூறித் தானே புறப்பட்டான். வியாக்கிரரதனைக் கண்ட அரிசேனன், "உன்னை யான் நன்கறிவேன்; வித்தியாதர நங்கைக்கும் ஓர் ஏழை மானிடனுக்கும் நடந்த திருமணத்தில் ஆறு காலமும் சோறு தின்னும் சுத்த வீரன் என்று நன்கறிவேன். காட்டு உன் திறமையை" என்றான்.

"மங்கையர் மணம் ஊழ்வழி நடப்பது. இது பெரியோர் கொள்கை. இதனை அறியாமல் ஏதேதோ பிதற்றிக்கொண்டு அச்சுவகண்டனோடு நீயும் போருக்கு வந்தனை. என் ஆற்றலை இதுவரை நீ அறிவதற்கு யான் வாய்ப்பளிக்காமைக்குப் பெரிதும் வருந்துகின்றேன். இதோ பார்" என்று கூறி ஒரே பாய்ச்சலில் அரிசேனனை இரு துண்டாக்கினான்.

குணசேனன்

அரிசேனன் வீழ்ந்தமை அறிந்த குணசேனன் படையில் புகுந்து பகைவர்களைச் சின்ன பின்னமாக்கினான். அவனால் அதிக நேரம் தன் ஆற்றலைக் காட்ட முடியவில்லை. அதற்குள் அருக்ககீர்த்தியின் படைத்தலைவன் இந்திரகாமன் அவனை எளிதில் கொன்று தீர்த்தான். இவ்வாறு வரசேனனைக்

காமகனும், அரிகேதனனை வியாக்கிரரதனும் வென்றி கொண்டனர்.

தூமகேதனன் சுவலனரதன் போர்

பின் தூமகேதனன் எனும் வீரன் ஒரு மத யானை இவர்ந்து, வயிரக் கவசத்துடனும் காலனும் அஞ்சும் கதையுடனும் காட்சியளித்தான். பகைப் படையில் தோன்றிய சடியரசன் தம்பி சுவலன ரதனைப் பார்த்து,

'மலையெ டுத்திடுகோ? மாநிலம் பிளக்கோ?
மறிகடல் அறஇறைத் திடுகோ?
உலைமடுத்து உலகம் பதலையா ஊழித்
தீமடுத்து உயிர்கள்அட்டு உண்கோ?
சிலையிடத் துடையார் கணைவலத் துடையார்
சிலர்நின்று செய்வதுஈங்கு என்னோ?
நிலையிடத் தவருள் நிகர்எனக்கு உளரேல்
நேடுமின் சென்று—'

"பக்கத்தில் காணும் மலையைக் கையில் எடுத்துப் பந்தாடி என் ஆற்றலைக் காட்டவா? பூமியைக் காலால் உதைத்துப் பிளந்து என் திறமையை வெளிப்படுத்தவா? கடல் வற்றுமாறு அதில் உள்ள நீரை இறைத்துக்காட்டவா? அல்லது உலகமாகிய உலையில் உங்களை எடுத்துப்போட்டு ஊழித்தீயில் வேகவைத்துச் சமைத்து உண்ணுவதன் மூலம் வெளிப்படுத்தவா? சிலையை இடத்தும் கணையை வலத்தும் ஏந்தி நிற்கும் இச்சிலரால் யாது பயன்? போரில் உறுதியோடு நிலைத்து நிற்கும் வீரர் இருந்தால் தேடிக் கண்டுபிடிப்பது நல்லது. அத்தகையோர் என்னை எதிர்க்கட்டும்" என்றான்.

சுவலனரதனும் இவ்வீரவுரையைக் கேட்டுக் கொண்டு சும்மா இருந்து விடவில்லை.

‘மலையெடுத் திடுவாய்! மாநிலம் பிளப்பாய்!
மறிகடல் அறஇறைத் திடுவாய்!
உலைமடுத்து உலகம் பதலையா ஊழித்
தீமடுத்து உயிர்கள்அட்டு உண்பாய்!
நிலையிடத் துளரோ நிகர்எனக்கு என்பாய்
நின்றனை நிகர்உனக்கு ஆகித்
தொலைவிடத்து அல்லால் சொல்இவை நுங்கட்கு
ஒழியுமோ தூமகே தனனே!’

“தூமகேதனு, ஆம்; மலையை எடுப்பாய்; கடலை வற்றச் செய்வாய்; எல்லோரையும் சமைத்துண் பாய்! நிலைப்படை வீரரில் உனக்கு நிகரானோர் இல்லை. எப்பொழுது? நீ என்னிடம் தோற்காமல் இருந்தால்தானே! அதுதானே உன்னால் முடியாது!” என்றான். “கதைப் போரில் வல்ல இருவரும் ஒரு வருக்கொருவர் இடையாமல் தட்டியும் குத்தியும், அடித்தும் தகர்த்தும் இடசாரி வலசாரியாகச் சுழன் றனர்; போர்க்கள மெங்கும் தாமேயாய்ச் சுழன்று வெஞ்சமர் புரிந்தனர். தேவர்களும் வியந்து கண் புதைத்தனர். இறுதியாகச் சுவலனரதன் கைத்தண் டால் தூமகேதனன் முடிசிதறி வீழ்ந்தான். ‘புகைக் கொடியோனும் இப்புவியில் ஒருவன் கையால் இறப் பனோ’ என்று அச்சுவகண்டன் சேனை அஞ்சி ஓட்டம் எடுத்தது.

அங்காரவேகன் தேவசேனன் போர்

அச்சமயம் அங்காரவேகன் ஓடும் சேனையைக் கையமர்த்தி நிறுத்தித் தைரியம் கூறினான்; ஊக்கம் பெற்று நின்ற படைகளைத் திரட்டிக்கொண்டு பகை

வர்களை எதிர்த்தான். அவனுக்கும் திவிட்டன் படைத்தலைவனுன தேவசேனனுக்கும் பெரும்போர் மூண்டது. வாளையும் வடிவேலையும் வீசி வீரம் பேசினர். நெடுநேரம் போர்புரிந்தபின் அங்கார வேகன், 'இத்துணை நேரம் இவனோடு போர்புரிவதா?' என்று சினந்து, தவருது பாயும் வேல் ஒன்றினைத் திரித்துத் தேவசேனன் மார்பகம் நோக்கி வீசினுன். தேவசேனன் அதனைத் தன் மணிக்கேடகத்தால் விலக்கித் தனது வடிவாளினுல் துண்டமாக்கினுன். எறிந்தவேல் இருதுண்டமானதைக் கண்ட அங்கார வேகன் மற்ருெரு வடிவேலை ஏந்தி ஆர்ப்பரித்து மேலெழுந்தான். தேவசேனன் அவன் வேற்படை பிடித்த தோளினை வெட்டி வீழ்த்தினுன். அங்கார வேகன் தன் எஞ்சிய இடக்கையில் ஒரு வாளேந் திப் போர்க்களம் முழுதும் திரிந்தான். தான் ஒருவனே வீரன் என்று கூறும்படிக் கையில் அகப்பட் டோரைக் கடுவாளுக் கிரையாக்கினுன். இறுதியில் தேவசேனன்மேல் சீறிவிழுந்தான். தேவசேனன் அவன் இடக்கையால் செய்யும் வீரப்போரினை வியந்து மகிழ்ந்தான்; அவன் கையிழந்தமை குறித்து மனமிரங்கினுன்; இரக்கக்குறிப்பால் அவனை நோக்கி, 'அங்காரவேக! நீ வீரருள் வீரன் என்பதற்கு ஐயமின்று. ஆனுல், ஒரு கையிழந்த உன்னுடன் போர்புரிதல் அறமன்று. இனி நீ போர்புரிய வேண்டாம். நிறுத்திவிட்டு உன் பாசறை செல்க; கவலை வேண்டாம்' என்றனன். அங்காரவேகன் ஆருயிர்க்கு அஞ்சினுன் அன்று; அமர் புரிந்தவாறு ஆர்ப்பரித்தான். தற்காப்பினை எண்ணி அவன் தலையை வெட்டி வீழ்த்தினுன் தேவசேனன்.

'நெய்யுற்ற வேலும் ஒருதோளும் வீழ
ஒருதோளில் நீடு செருவைச்
செய்யுற்ற போழ்தில் எதிரே விலங்கி
இதுதேவ சேனன் மொழியும்:
கையுற்றது ஒன்று, கவலேல் உனக்குஇது
உறுமாறு போக எனவும்
மையுற்ற காளை வருவானை வாளின்
உயிர்வவ்வி ஞன்அம் மறவோன்.'

கருடத்துவசன் சடியரசன் போர்

அங்காரவேகன் ஆருயிர் இழப்பு அச்சுவகண்டன் தோல்வியின் தொடக்கம் என்பதை அறிந்தனர் யாவரும். வீரர்களும் தப்பித்தோம் பிழைத்தோமென்று ஓடி யொளித்தனர். கருடத்துவசனுல் இதைக் கடுகளவும் பார்த்துக்கொண் டிருக்க முடியவில்லை. சினக்களிறு ஊர்ந்து செருக்களம் புகுந்தான். போர்க்களத்தில் சுவலனசடியரசனே இவனை எதிர்க்க வேண்டியிருந்தது. இவன் குருவாக இருந்தவர் சுவலனசடி. ஆதலால், இவன் தன் குரவரை நோக்கி,

"குருவ ரோடு படைபொருதல் கூடிற் றன்று குலவேந்தே."

"வேந்தே, நீங்கள் என்னுடை ஆசான்; அன்றியும் நரைமுதிர்ந்து வலிகுறைந்த முதியோர். ஆதலால், தங்களோடு போர்புரிதல் தக்கதன்று; எதிர்ப்பதும் அறமும் அன்று. இளைஞரும் வலியருமாகிய மற்றையோர் வந்து எதிர்க்கட்டும்; தயைசெய்து நீங்கள் பாசறை நோக்குங்கள்" என்றுன்.

சடியரசனும் சாதாரணமான வெறும் வீரன் அல்லன். அவன் கருடத்துவசனை விளித்து,

"பொருவ ராயின் யாரோடும்
பொருவர் பூமி வேண்டுபவர்."

"மாற்றுள் மண்கொள்ளக் கருதும் மன்னன் யாரோடு வேண்டுமானாலும் பொருவான். ஆதலால், குரவன் என்னும் உபசரிப்பு இங்கு வேண்டாம். அதற்குரிய இடம் வேறு. படுகளத்தில் ஒப்பாரி விரும்புவார் உண்டோ? யாவரே ஆயினும் எதிர்த்தவர் தம்மொடு போர்புரிதலே நீதி என்னும் போர் முறையினை நீ நன்கு உணராய் போலும்! போர் புரிந்தபின் நான் வலியனோ அன்றி எளியனோ என்பதை உணர்த்துவாய்" என்று கூறிக்கொண்டே அம்புமாரி பொழிந்தான். சிறிது நேரத்தில் கருடத்துவசன் வில்நாண் அறுத்தெறிந்து, அவன் மாயத்தையும் குலைத்தான்; வேறுவேறாக அவன் கைக்கொண்ட படைக்கலங்களையும் அழித்தான். இறுதியில் கருடத்துவசன் தோல்வியுற்று உயிரிழந்தான்.

சிரீசேனன் சிரீபாலன் போர்

கருடத்துவசன் அழிவால் கலங்கி ஓடிய படையினை வழிமறித்து நிறுத்தினான் சிரீசேனன்; படைகளுக்கு வீர உரை கூறினான்:

'பொன்றும் இவ்உட லின்பொருட்டு
என்றும் நிற்கும் இரும்புகழ்
இன்று நீர்இகழ்ந் தீர்களால்.'

"வீரர்களே! என்றேனும் ஒருநாள் நிச்சயம் அழியக்கூடிய இவ்வுடலைக் காப்பதில் இவ்வளவு ஏன்? ஏன் இப்படிப் பயப்படுகின்றீர்கள்? என்றும்

நிலைத்திருப்பது புகழ் அல்லவா? அழியும் உடலைக் காப்பாற்றி என்றும் அழியாப் புகழை அழித்துவிட்டீர்களே!

'மான மாமணி வீழ்த்துஉயிர்க்கு
ஊன மாம்என ஓடுவீர்!
ஈன வார்மயிர்க்கு ஏதமாம்
கான மாஅது காணுமே.'

"மானமாகிய மாணிக்கத்தை அழித்துவிட்டு இவ்வுயிர்க்கு ஏதோ ஆபத்து வந்ததாக எண்ணி ஓடுகின்றீர்களே! இழிந்த மயிர் ஒன்று இழியினும் மானமெனக் கருதி உயிர்விடும் கவரிமானைப் பற்றிக் கேட்டறிந்ததில்லையோ? திரும்புங்கள் போர்முகம் நோக்கி! ஏந்துங்கள் வில்வாளினை! செலுத்துங்கள் பகைவர் மார்பிலே!" என்ற சிரீசேனன் வீரமுழக்கம் அதற்கேற்ற பலனைத் தந்தது. படைகள் சிரீசேனன் பலத்தைக் கண்டு புறப்பட்டன.

அப்பொழுது அப்படைகளையும், சிரீசேனனையும், திவிட்டன் படைத்தலைவன் சிரீபாலன்தான் எதிர்த்து நின்றான். இப்போரிலும் அச்சுவகண்டனுக்குத் தோல்விதான். சிரீசேனன் கொன்று வீழ்த்தப்பட்டான். படைகள் சிதைந்து பின்னிட்டன.

கனகசித்திரன் விசயன் போர்

பின்னிட்டதைக் கண்டனன் அச்சுவகண்டன் மகன் கனகசித்திரன்; ஓடும் படைகளைத் தடுத்து நிறுத்தினான்; படைகளின் இழிநிலை கண்டு வசைமொழி கூறியும், புகழ்நிலைக்குரிய ஊக்கம் காட்டியும் அச்சம் போக்கினான்; 'எளிய மானுடர்க்கோ விஞ்சையர் அஞ்சுவது' என்றெண்ணிச் சீற்றமுற்

றெழுந்தான்; தான் தவத்தால் பெற்ற தனி வாளி ஊனப் பற்றிப் பகைவர் சேனையிற் புகுந்து, கைப்படு வோரைக் கண்டதுண்டமாக்கினுன். களத்தில் கண்ட கண்ட இடமெல்லாம் கனகசித்திரன் காட்சி யளித்தான். அவன் உருவமே எங்கும் தோன் றிற்று. அவனை எதிர்த்த வேந்தர்கள் வெட்டுண்டு விழுந்தனர். யானைகளும் குதிரைகளும் எதிர்த்துத் தொலைந்தன. மேருவனைய தேர்கள் பல தகர்ந்து பொடியாயின. அமர்க்களத்தில் உதிரவெள்ளம் அலைவீசி ஓடிற்று. திவிட்டன் சேனையால் கனக சித்திரனை எதிர்த்துநிற்க முடியவில்லை. புறங் கொடுத்தது. கனகசித்திரனுக்கே மேலும் பலம் அதிகரித்தது. அச்சுவகண்டன் தம்பியர்களும் முன்னர்த் தோற்ருேடிய படைகளுடன் போர்க்களம் புக்கனர். திவிட்டன் சேனைகள் முழுதும் சின்ன பின்னமாயின. சடியரசன் முதலியோர் பகைவர் களின் படை முன்னேற்றங் கண்டு அஞ்சி அயர்ந் தனர்.

அயர்ந்த நிலைகண்டு ஆற்ருனய் அலப் படையோனுகிய விசயன் ஆர்ப்பரித்தெழுந்தான்; கலப்பையைக் கையில்கொண்டு பகைவர்சேனையுள் புகுந்தான்; வீரர்கள் உடலங்களைத் தன் படையால் உழத்தொடங்கினுன்; இவன் உழவில் மடியாத வீரர் இல்லை என்று சொல்லும் அளவுக்குப் பொரு தான். அஞ்சாது அமர் புரியும் அலப்படையோன் ஆற்றல் கண்டு வியந்தனர் கனகசித்திரனும் அச்சுவகண்டன் தம்பியரும். அலப்படையோன் இன்னுன் என்று அறிந்ததும், அவர்கள் வியப்பு மாறி வீராவேசம் பெற்றனர்; விசயனைச் சுற்றி வளைத்

தனர்; வெகுண்டெழுந்து கடும் போர் புரிந்தனர்; அப்பொழுது திவிட்டன் சேனை தோற்றது என்ற பொய் மொழியை எங்கும் பரப்பினர். இம்மொழி கேட்ட திவிட்டன் சேனை போரிடுவதை நிறுத்திப் புறமுதுகிட்டோடிற்று.

சேனை பின்னிடுவது கண்ட விசயன் தன்னை வளைத்த வீரர்களை எதிர்த்து நிற்கும் மனவலி இழந்துவிட்டான்; மனவலி இல்லாததால் உடல் வலியும் பயனின்றிச் சோர்ந்தான். அவன் சோர்வு கண்டு அவனைச் சுவர்க்கம் அனுப்ப முயன்றனர் பகைவர்கள். ஆனால், பகைவர் முயற்சி தோற்றது. தெய்வாதீனமாக ஓர் உதவிபெற்றான் விசயன்; ஒரு கோளரியும், கொடுங் கலப்பையும் உதவியாகப் பெற்றான். இவ்விரண்டும் திடீர் என்று தோன்றியது கண்ட பகைவர், சிறிது நேரம் திகைத்து நின்றனர். அவர்கள் சேர்வு விசயனின் வெற்றியாக முடிந்தது. கோளரி ஊர்ந்து கொடுங் கலப்பையைக் கைக் கொண்டு விஞ்சைய வேந்தர்களை விநாடியில் விளியச் செய்தான் விசயன். விஞ்சையர் படைகளும் முன் போன்று இரிந்து ஓடின.

இரத்தினகண்டன் அருக்ககீர்த்தி போர்

விசயனின் வெற்றி, விரோதியாலும் போற்றப் பட்டது. விஞ்சையர் வீரன் இரத்தினகண்டன் விசயன் ஆற்றலைக் கண்டு வியந்து பகைவன் என்பதையும் மறந்து ஒரு விநாடி புகழ்ந்தான். அது தானே வீரனுக்கு அழகு! அடுத்த கணத்தில் பொதுமை உள்ளம் நிலைகொண்டது. பழிக்குப்பழி வாங்கப் படபடத்தது அவன் உள்ளம். பக்கத்தி

விருந்த ஒரு பெருமலையைக் கையால் அசைத்துப் பிடுங்கி எடுத்தான்; பந்தெனச் சுழற்றிப் புறப்பட்டான். யாவரும் அஞ்சத்தக்க அவன் உருவமும், அவன் கையில் பந்தெனச் சுழன்ற மலையுங் கண்டு உலகமுடிவினை உண்டாக்கும் அக்கினியோ என்று அஞ்சினர். படைகள் எதிர்க்கமுடியாது ஓட்டமெடுத்தன.

இத்தருணத்தில்தான் அருக்ககீர்த்தி தோன்றுகின்றான். அவன் வில்லில் வல்லவன். அவன் தன் வல்லபத்தை வெளிப்படுத்தும் சமயம் இதுவே என்று எண்ணினான்; இரத்தினகண்டன் கையில் உள்ள வயிரவாளி ஒன்றினை எய்தான். ஒரே வாளி இரத்தினகண்டன் உடலத்தைக் கிழித்தது; அவன் ஏந்திய மலையையும் சுக்கு நூறாக்கியது. எடுத்த கருவரையோடு மற்றொரு பெருவரையும் புவிமீது விழுந்து புரள்வதுபோல் இரத்தினகண்டன் உடல் புரண்டது. அவன் மலையோடு விழுந்த அதிர்ச்சியில் கடல்கள் யாவும் கலங்கின. பெரு மலைகளும் மலையனையான் வீழ்ந்தானே என்று விம்மின.

'வரையொடு வரையென மறிந்து மண்ணின்மேல்
விரையுடை அலங்கலான் வீழும் ஆயிடைத்
திரையொடு கனைகடல் கலங்கிச் சிந்தின;
புரையுடை விலங்கலும் புலம்பு கொண்டவே.'

அச்சுவகண்டன் திவிட்டன் போர்

திரண்ட வெள்ளத்தில் புரண்டோடிற்று இரத்தினகண்டன் உடல். அவனுக்குப் பின் திவிட்டன் சேனையை எதிர்க்கும் பெருவீரன் எவனும் இல்லை. ஆதலால், அச்சுவகண்டன்தான் இனிப் போர்

செய்யவேண்டும் என்ற நிலை ஏற்பட்டது. ஒற்றர்கள் அச்சுவகண்டனிடம் ஓடினர்; அவனுடைய தம்பி யரும், தனயரும், சுற்றத்தாரும் திவிட்டன் சேனை வீரர்களால் சிதறுண்ட விதத்தினை ஒன்றுவிடாது எடுத்தியம்பினர். கேட்ட அச்சுவகண்டன் இடி யேறுண்ட நாகம்போல் நடுங்கினான்; அடுத்த கணமே நடுக்கம் நீங்கிக் கோபம் கொண்டான்; உலகம் முழுவதையுமே அழித்துவிட எண்ணினான்; இவ்வுலகிலுள்ள சராசரப் பொருள்களை ஒருங்கு வாரிச் சென்று பெரும்புறக்கடலில் இடவல்ல மாயாதேவியினைத் தியானித்தான்.

சண்டவேகை என்ற பெயர்பெற்ற அம் மாயா தேவி அவன்முன் தோன்றினாள்; அவன் விருப் பத்தை நிறைவேற்ற விரைந்து நின்றாள். அச்சுவ கண்டன் அவளை நோக்கி, "அணங்கே, மண்ணுல கில் என்னை எதிர்த்து நிற்கும் பகைவர் ஒருவரையும் விடாதழித்து ஒழிக்கவேண்டும். அதுவே என் குறிக்கோள்" என்றான்.

அவன் வேண்டுகோளுக் கிணங்கிய சண்ட வேகை, கூற்றுவனை அழைத்து, "அச்சுவகண்டன் ஆவல்படி மண்ணுலக உயிர்கள் யாவும் இன்று மாலைக்குள் என் வாயிலகப்பட்டு மடியப் போகின் றன. நீயும் உன் தொழிலைத் தட்டின்றி நடத்தலாம்" என்று நினைவூட்டிற்று. இதனைக் கேட்டு நின்ற பைசாசங்களும் கூளிகளும், "இன்று யாம் அனைவ ரும் விலாப் புடைக்க உண்டு மகிழலாம்" என்று துணங்கைக் கூத்தாடி, அச்சந்தரும் ஆயுதங்கள் தாங்கிச் சண்டவேகையைப் பின்தொடர்ந்தன.

இச் சேனைகளைக் கொண்டு மாயாதேவி திவிட்டன் சேனையைத் தாக்கினாள். அவள் மாயத்தால் ஓர் ஊழிக் காற்று வீசி எழுந்தது. ஊழிக் காற்றோடு ஊழித் தீயும் உருத்தெழுந்தது. கடல்கள் பொங்கி மலையென அலைகளை வீசின. எழுந்த பெருங்காற்று சராசரங்களையும் பிடுங்கி வீசிற்று. ஊழித் தீ அவை களை எரித்தது. எரிக்கப்பட்ட பொருள் எல்லாவற் றையும் பொங்கி எழுந்த கடல் புசித்து மகிழ்ந்தது. இவ்வகை மாயங்கள் இயற்றும் சண்டவேகை ஒரு பெருங்கரிவரையைப் பெயர்த்தெடுத்துக் குடை யெனப் பிடித்தாள். அதனால் சூரிய வெளிச்சம் மறைக்கப்பட்டு உலகம் எங்கும் இருள் சூழ்ந்தது. இருளில் அகப்பட்ட திவிட்டனின் வீரர்கள் கண் ணொளி இழந்து ஒருவரோடு ஒருவர் மோதிக் கொண்டு அலமந்து நின்றனர்.

இம் மாயாதேவியின் மாயம் அறியாத மானுடன் (திவிட்டன்) தன் மைத்துனன் அருக்ககீர்த்தியை ஆச்சரியத்தோடு பார்த்தான். குறிப்பறிந்த அருக்க கீர்த்தி, ''அச்சுவகண்டன் ஏவலால் இவ்வுலகை ஒருங்குண்ணும் சண்டவேகை என்னும் மாய தேவதை தன் கூளிப் படையுடன் நம்மேல் வருகின் றது போல் தெரிகின்றது. இஃது அனைவரையும் ஒருங்கு அழித்தாலன்றி வறிது செல்லாது. இதனைத் தடுக்கும் ஆற்றலுடையார் யாரும் இல்லை. இதன் வலியறிய வல்லார் இலர்'' என்று குரல் நடுக்கத் தோடு கூறினான்.

அருக்ககீர்த்தியின் குரல் நடுக்கம் திவிட்டனைத் திடுக்கிடச் செய்யமுடியவில்லை. மைத்துனன் அச்சங்கண்டு கலகலவென்று சிரித்தான். சீயங்

கிழித்த சேவகன் (திவிட்டன்), "ஏதோ பேய் ஆரவாரத்தோடு வருமாம்! அதற்கு ஆண்மை மிகு வீரர்கள் அஞ்சுவார்களாம்! பார்க்கலாம்!" என்று சொல்லிக்கொண்டே, முன்போல் வான்முகடு கிழித்து மேலோங்கிச் செல்லும் பேருருக்கொண்டு நின்ருன். அவன்பால் தண்டு, வில், வாள், சங்கு, ஆழி என்ற ஐம்படைகளும் வந்து சேர்ந்தன.

"வலம்புரி சிலம்ப வாய்வைத்து இருஞ்சிலை வளைய ஏற்றிக்
கலம்புரி கனபொன் ஆழிக் கைவிரல் கதிர்ப்பச் சூட்டி
உலம்புரி வயிரத் தோளான் உரப்பினுன் உரப்ப லோடும்
சலம்புரி தெய்வம் அஞ்சித் தன்உரு அடைந்த தன்றே."

சேர்ந்தவுடன் சங்கினை எடுத்து எண்திசையும் செவிடுபட ஊதினுன்; வில்லினை வளைத்து நாணெலி செய்தான்; தன்மோதிரவிரலால் சண்டவேகையைச் சுட்டிக் காட்டி வாயால் உரப்பி அஞ்சுவித்தான்.

யாரும் அஞ்சவந்த அச் சண்டவேகை அஞ்சி நடுங்கினுள்; தன் போலி உரு மாற்றிப் பண்டை உருக் கொண்டாள்; தன் கூளிப் படையொடு திரும்பி ஓட்டம் பிடித்தாள். திரும்பும் வழியில் அச்சுவகண்டனது பெரும் படையையும் அலைத்து அழித்துச் சென்றது கண்ட அச்சுவகண்டன், கண் சிவக்க, பற்களை நொறுநொறு எனக் கடித்துத் தன் பட்டத்து யானைமேல் ஏறிக்கொண்டு அமர்க் களம் சென்ருன். அவனைக் கண்டு திவிட்டன் படைகள் அஞ்சி நடுங்கி நின்றன. அவ்வமயம் திவிட்டனுக்கு ஒரு தெய்வக் கருடப் புள் ஊர்தி யாகப் பறந்து வந்தது. அவன் அப்புள்ளை வலங் கொண்டு போற்றி அதன்மேல் ஏறிக்கொண்டு அச்சுவகண்டனை எதிர்க்கத் தொடங்கினுன்.

திவிட்டனுக்குத் தெய்வப்புள் வந்ததைப் பார்த்திருந்தும், அச்சுவகண்டன் அஞ்சிப் பின் வாங்கினுன் இல்லை. "ஏ, மானுடனே! நீயோ, என்னை எதிர்ப்பாய்? யானை ஏற்றம், குதிரை ஏற்றம் அறியாத குற்றத்தால் எளிய பறவைமேல் ஏறிக்கொண்டனை போலும்! உனக்கு உயிர்மேல் பற்றிருக்குமானுல் சிறிதும் தாழாமல் எம்மை வேண்டிப் பணிந்து போற்றுக. நீ செய்த பிழையனைத்தையும் பொறுத்துக்கொண்டு உன்னை விட்டுவிடுகிறேன்" என்று வீரமுழக்கம் செய்தான். அச்சுவகண்டன் வீர உரை திவிட்டனின் திண்மையை அதிகப்படுத்திச் சினத் தீயை வெளிப்படுத்திற்று. குறுநகை செய்து போருக்கழைத்தான் அச்சுவகண்டனை.

போர் மூண்டது. அச்சுவகண்டன் வில்லை வளைத்து நாணொலி செய்து அம்பு மாரி பொழிந்தனன். திவிட்டன் ஏறியிருந்த கருடனே தன் இறக்கைகளால் அம்புகளை உதறி முறித்தெறிந்தது. உடனே அச்சுவகண்டன், திவிட்டன் மீது தேவாஸ்திரங்களை எய்ய எண்ணி, முதலில் நாகாஸ்திரத்தை ஏவினுன். அக்கணை ஆயிரங்கோடி நாகங்களாய் ஆகாயம் முழுதும் பறந்தது; நாகங்கள் அழல் நஞ்சினைச் சிந்தித் திவிட்டனை வளைத்தன. திவிட்டனும் அஞ்சாது கருடாஸ்திரத்தை ஏவினுன். அது நாகாஸ்திரத்தைத் துண்டித்துத் தெறித்தது. நாகங்கள் மறைந்தன. விஞ்சையன், உலகத்தையே அழிக்கும் அக்கினியாஸ்திரத்தை விடுத்தான். திவிட்டன் அதனை அழிக்க வருணுஸ்திரத்தை விடுத்தான். இவ்வாறு ஒவ்வொரு கணைக்கும் மாற்றுக் கணை விடுத்தவாறு இருந்தான்.

இறுதியாகப் பகைவரை மயக்கிக் கொல்லும் மோக ஞஸ்திரம் புறப்பட்டது. இவ்வம்பு புறப்பட்டதும் உலகமே மயக்கத்தில் ஆழ்ந்தது. திவிட்டன் ஊர்தி யாகிய கருடனும் சிறிது மயக்கங் கொண்டது. இதனை உணர்ந்த திவிட்டன் தன் கையிலிருந்த ஞாஞஸ்திரத்தை விடுத்தான். மோகனப்படை தொலைந்தது. உலகம் மயக்கம் தெளிந்தது. யாவ ரும் திவிட்டனைப் போற்றினர்.

இத்துணைக் கணைகளாலும் வெல்ல இயலாத அச்சுவகண்டனுக்கு ஆத்திரம் அதிகரித்தது. எப்படியும் திவட்டனைக் கொன்று தீர்க்கவேண்டும் என்ற முடிவோடு தன்னிடமுள்ள கடைசி ஆயு தத்தையும் பயன்படுத்தினுன். அதுதான் அவனிட மிருந்த சக்கரப்படை. அப்படையைக் கையில் எடுத்து மந்திரம் செபித்து, 'பகைவனைக் கொல்க' என்று விடுத்தான். புறப்பட்ட சக்கரப்படை அனல் கக்கி ஆர்ப்பரித்துப் பாய்ந்தது. நெருப்புப் பிழம்பில் மறைந்து விட்டான் திவிட்டன். அவன் நெருப்பில் மூழ்கி எரிவதாகவே காணப்பட்டது. அக்காட்சி உண்மை என்று கருதி யாவரும் நடுநடுங்கி ஓலமிட் டனர். ஆனுல், நெருப்புமிழ்ந்து புறப்பட்ட ஆழிப் படை திவிட்டன் அடிபணிந்து அவனை மும்முறை வலம் வந்து வணங்கி நின்றது. அவன் அப்படையை வலக்கையான் வாங்கிச் சுழற்றி அச்சுவகண்டன் மேல் ஏவினன். அச்சக்கரம் சிறிதும் தயங்காமல் அச்சுவகண்டன்மேல் பாய்ந்து, அவன் மார்பினைப் பிளந்தது; தலையினைத் தறித்தது; அவன் ஏறிய பட் டத்து யானையையும் கொன்று வீழ்த்தியது. மலைச்

சிகரத்தினின்றும் மேகம் புரளுமாறு அச்சுவகண்டன் தரையில் புரண்டான். புழுதி படிந்தது.

நன்னெறி அறியான் ஒருவன், நெறி தவருத ஒருவனைக் குறை கூறுதல் உலகியல். ஆனுல், அத்தூற்றல் மொழிகள் குறை கூறியவனையே அழிக்கும் கருவிகளாக மாறி அவனைத் துன்புறுத்திக் கொன்று விடுதலும் உலகியலே. வழக்கிடும் இருவரில் வாதிக்கும் நெறியறியாத பிரதிவாதியின் விளக்க உரை அவனுக்கே தோல்வியைத் தருவதும் உலகியல். அதுபோல், எல்லாப் பேறும் பெற்றுத் திகழ்ந்த திவிட்டனை அழிக்க ஏவிய ஆழிப்படை, அடாத செயல்புரிந்த அச்சுவகண்டனையே அழித்தது.

‘நெறிதலை திரிவி லான்மேல் நினைவிலான் மொழியப் பட்ட
*மறுதலை முழக்கும் ஏது வாய்வழி அழிப்ப தேபோல்
பொறிதலை மணந்த காளை மேல்வரப் புணர்த்த நேமி
செறிதலை யிலாத மன்னன் தன்னையே செகுத்த தன்றே.’

கண்டோர் கூற்று

“அச்சுவகண்டன் கொலையானைமேல் வெண் கொற்றக் குடைநிழலிலே பல மன்னர்கள் சூழ மண்ணுலகு நோக்கி வந்தான்.

‘ கொலையானை மேல்ஓர் குளிர்வெண் குடைக்கீழ்ப்
பலயானை மன்னர் பலர்போற்ற வந்தான்.’

“வந்தவனின் மலைபோலும் உறுதியுடைய நெஞ்சம் பிளப்புண்டு மண்ணில் சாய்ந்தான். இதிலிருந்து நிலையாமை எப்படியும் உறுதியாக நிலைத்துவிட்டது என்ற உண்மையை நாம் அறிய முடிகிறது.

---

* பிரதிவாதியின் விளக்கம் பகைவன் கொள்கைக்கு ஆதரவு தருவதாய், பிரதிவாதியின் வெற்றிக்குரிய வழியைக் கெடுத்தல்.

"மலையாகம் போழாக மற்றிவனே சாய்ந்தான்
நிலையாமை சால நிலைபெற்றது அன்றே!'

"'ஆகையால், இவ்வுலகில் வாழ் மக்களே, நம் உடல் வலியும், பகைவரைக் கொல்லும் சூழ்ச்சித் திறனும், இன்பவாழ்வும், வாழ்வை வளப்படுத்தும் நம் உடல் வனப்பும், தோற்றப் பொலிவும் கடைசி வரை நிலைத்திருப்பதில்லை. நிலையற்ற இச்செல்வங்களைக் கொண்டு செருக்கில் அழாதீர்கள்' என்று சொல்வதைப் போல் மணிமுடி தரித்த மன்னர் மன்னன் அச்சுவகண்டன் அடியோடு சாய்ந்தான்"

'வலியும் அடுதிறனும் வாழ்வும் வனப்பும்
பொலிவும் கடைபோகா; பூமிமேல் வாழ்வீர்!
கலியன்மின் என்றிதனைக் காட்டு வான்போல்
மலிபொன் மணிமுடியான் மற்றிவனே மாய்ந்தான்.'

என்றனர் கண்டவர்.

அச்சுவகண்டன் தேவி

'வண்தார் மணிமுடியான் மார்பு துணிகிடப்பக்
கண்டாள் பெருந்தேவி, கண்டேதன் கைசோர்ந்து
வெண்தாரை வேல்நெடுங்கண் நீர்மூழ்கி மேற்பிறழ
விண்டாள் உயிர்; பின்னும் வெற்றுடலம் ஆயினள்.'

அச்சுவகண்டன் ஆவிதுறந்தமை கேட்டறிந்த தேவி போர்க்களம் நோக்கி விரைந்தாள்; முடி மன்னன் மார்பகம் பிளந்து இரு துண்டாகக் கிடந்தமை கண்டாள்; உளம் சோர்ந்தாள்; உடல் சோர்ந்தாள்; செயலழிந்தாள். வேல் நெடுங்கண் நீர் நெடுங்கண்ணாயிற்று. நீரிலே மூழ்கினள்; கணவனைக் கட்டியணைத்து வெற்றுடலம் ஆயினள்!

9. முடிசூட்டு விழா

தந்தையின் முடிவு

வெற்றிமாலை சூடிய வீரன் திவிட்ட நம்பி வீரர் சூழ, மன்னர்கள் சூழ, விஞ்சையர் மண்ணவர் சூழ வெற்றி முரசோடு நகர் திரும்பினான்; நகரை வலமாக வந்து அரண்மனை அடைந்தான்; தந்தையின் பாதம் பணிந்து நின்றான்.

இன்ப வெள்ளத்தில் மூழ்கிய பயாபதி அங்குக் கூடியிருந்த யாவரையும் நோக்கி, "பெரியோர்களே, மக்களைப் பெற்றதால் பெறும் பெரும்பயனை யான் அடைந்தேன் இஃது, யான் முற்பிறப்பிற் செய்த மாதவத்தின் பயனென்றே கருதுகின்றேன்.

> 'மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
> என்நோற்றான் கொல்'

எனும் சொல்லினைப் பெற்றுவிட்டேன். யான் பெற வேண்டியது இன்னும் ஒன்றுளது. உங்கள் முன்னிலையில் திவிட்ட நம்பிக்கு மணிமுடி சூட்டுவிழாவைக் காண வேண்டும் என்பதே என் அவா. அதனை எல்லோரும் கூடியிருந்து வெற்றியாக முடிக்க வேண்டும்" என்று வேண்டினான்.

முடிசூடல்

சடியரசன் முதலிய விஞ்சையரும், மண்ணுலக வேந்தர்களும், குறுநில மன்னர்களும், மற்றைய பெரியோர்களும் அவன் அழைப்பினை ஏற்றுக்

கொண்டு முடிசூட்டு விழாவிற்குரிய ஏற்பாட்டில் முனைந்தனர். வள்ளுவ முதுமகன் முரசறைந்து, முடிசூட்டு விழாவிற்கேற்பக் குடிகள் தங்கள் வீடுகளையும் தெருக்களையும் அலங்கரிக்கும்படி அறிவித்தான். நகர் முழுதும் ஒரே கலகலப்பு!

விழா நாளன்று காலை, புண்ணிய யாறுகளிலிருந்து கொணர்ந்த தூய நீரை முனிவர்களும் அந்தணர்களும் எடுத்துத் திவிட்டனுக்குத் திருநீராட்டினர். பின்னர் புத்தாடை அணிவித்து, 'இத் திவிட்ட நம்பியே மண்ணுலகிற்கும், விஞ்சையர் உலகிற்கும் மன்னர் மன்னன் ஆவான்' என்று அறிவித்து, ஒளிமிகு மணிமுடியை அவன் முடியில் அணிந்தனர்.

ஐம்படை

திவிட்டன் முடி மன்னன் ஆயதும், போர்க்களத்து உதவிய ஐம்படைகளும் மீண்டும் இவனுக்குத் துணைபுரிவான் வேண்டி இவனை வந்தடைந்தன. சங்கம் பதுமம் முதலிய நிதிவகைகளும், சிந்தாமணி, சூளாமணி முதலிய மணிவகைகளும் அவனிடம் வலிந்து வந்தன. இச்சிறப்புக்களைக் கண்டு அனைவரும் போற்றிப் புகழ்ந்தனர். திவிட்டன் இவ்வளவு சிறப்பிற்கும் செருக்கற்ற திண்ணியனுய்த் திறம்பட ஆட்சி செய்தான்.

10. துறவு

துறவு என்றவுடன், வாசகர்கள் திவிட்டனின் துறவு போலும் என்று துணுக்குறலாம். இப்பகுதி திவிட்டனின் தந்தை பயாபதி துறவு பூணும் பகுதியைக் கூறுவதாகும்.

பயாபதி மனமாற்றம்

திவிட்டன் எல்லாவிதச் செல்வத்தையும் பெற்றதோடு மக்கள் பேற்றையும் பெற்று எவ்வுலகிலும் தனக்கு இணையில்லை என விளங்கினான். இதனைக் கண்ணால் கண்டு களிகூர்ந்த பயாபதி மன்னன் செருக்கில் ஆழ்ந்து விடவில்லை. தன்னையே எண்ணிப் பார்க்கிறான்; திவிட்டனை மகனாக அடைந்ததால் தான் பெற்ற இன்பத்தையும் புகழையும் நினைக்கின்றான்; இவ்வளவுக்கும் காரணம் தான் முற்பிறப்பில் செய்த தவப்பயனே ஆகும் என்பதை உணர்ந்தான்; இன்னும் தவம் செய்தால் இதனினும் மேலான, நிலைத்த வீட்டின்பத்தை அடையலாம் என்று எண்ணினான்.

அமைச்சர்களோடு ஆலோசனை

'நிலைத்த பேரின்பத்தை அடைய பிறவிப்பிணியினின்றும் உய்யவேண்டும்; பிறவிப் பிணியைப் போக்கக் கூற்றுவன் கையினின்றும் தப்பவேண்டும்; கூற்றுவனை விலக்கும் வழிகளைக் குணக்குன்றனைய சமண முனிவர்களிடமே கேட்டுணர முடியும்' என்ற முடிவை அமைச்சர்கள் எடுத்துரைத்தனர்.

முனிவர் உரை

சமண முனிவர் ஒருவர் பயாபதிக்கு நான்கு வகைக் கதிகளைப் பற்றி உபதேசித்தார். 'நான்கு கதிகள் நர ககதி, விலங்கு கதி, மானுட கதி, தேவ கதி என்பன ஆகும். நரக கதி பாவம் செய்தோர் மேவும் உலகு நிலை. ஓர் அறிவு உயிர் முதல் ஐயறிவு உயிர் ஈருக அமைவது விலங்கு கதியின்பாற்படும். ஆறறிவு உடைய மக்கள் நிலையே மானுட கதி எனப் படும். மக்களுள்ளும் அவரவர் பண்பிற்கேற்ப உயர்ந்த தாழ்ந்த கதியினைப் பெறுவர்.

'மக்கள் மானுட கதியில் அடையும் இன்பம் மிக விசித்திரமானது. காட்டில் வழிதவறிய ஒருவனை, புலி ஒன்று துரத்திக்கொண்டு ஓடிற்று. புலிக்குத் தப்பிக்க அவன் ஒரு மரத்தில் ஏறிக் கொண்டான்; பொழுது சாய்ந்த நேரமாதலால் இராப் பொழுதை மரத்திலே கழிக்க முடிவு செய் தான்; ஒரு மரக்கிளையைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டு அதில் படுத்துத் தூங்கினான். தூக்கத் தில் பிடிதவறியது. கீழே விழும்போது விழித்துக் கொண்டான்; கையால் மீண்டும் மரக்கிளையைப் பிடிக்கத் தாவினான். கிளை அகப்படவில்லை. கிளை யில் பின்னிக்கொண்டிருந்த கொடி ஒன்று அவன் பிடிக்கு அகப்பட்டது. கொடியால் அவனைத் தாங்க முடியவில்லை. அறுந்து விட்டது. ஆதலால், மரத்தடியில் இருந்த ஓர் பாழுங் கிணற்றில் விழுந் தான். கிணற்றிலிருந்த ஓர் ஐந்தலைப் பாம்பு அவ னைச் சீறிக்கொண்டு பாய்ந்தது. அப்பாம்பு வாயி னின்றும் தப்ப மேலேறினான். மேலே நின்ற ஒரு மதயானை அவனை நசுக்கிவிடுவதுபோல் பிளிறிற்று.

என் செய்வான் பாவம்! கிணற்றுச் சுவரில் படர்ந்து தொங்கிய கொடிகளைப் பிடித்துத் தொங்கினான். மேலேறினால் யானை; கீழிறங்கினால் பாம்பு! கொடி யாவது பயன்பட்டதா என்றால், அதுவும் இல்லை. கிணற்றைச் சுற்றி ஓடிவந்த இரண்டு எலிகள் கொடி களைப் பற்களால் நறுக்கி விட்டன. அவன் கதி, பாம்பின் கடிக்கு ஆளாக வேண்டியதுதான்! இந் நிலையில் அவன் முதலில் தூங்கிக்கொண் டிருந்த மரக்கொம்பின் உச்சியில் கட்டப்பட்டிருந்த தேன் கூட்டிலிருந்து ஒரு சொட்டுத் தேன் அவன் வாயில் சிந்திற்று. அத்துளியைச் சுவைத்து அவன் அடைந்த இன்பம் சொல்லில் அடங்காது. அடுத்த கணம் அவன் அடையப் போகும் பரிதாப முடிவை யும் மறந்து மகிழ்ந்தான். அத்தகையதே மானுடர் அடையும் இன்பம்!

'இம்மானுடர் செய்யும் புண்ணிய மேலீட்டால் அடைவதே தேவ கதி. தேவ கதியையும் தாண்டி யது அழியா வீட்டுலகம், என்பதை முனிவர் வாயி லாக உணர்ந்தான்!

வீடுபேறு

இவ்வாறு மெய்யுணர்ந்த பயாபதி எல்லாச் செல்வத்தையும் துறந்து, மறக்க இயலாத மனைவி மக்கள் காதலையும் துறந்து, தவம் இயற்றினான். தன் கேவலப் பேரொளியால் வீட்டுலகு அடைந்து அருங்கதிர் பரப்பும் ஓர் சூளாமணியாய்த் திகழ்ந் தான்.

[ஆகையால், இக்கதைக்கும் 'சூளாமணி' எனப் பெயர் சூட்டினர்.]